387

ராதி வருஷ
ஐப்பசி மீ

ஸம்புடம் - 8
ஸஞ்சிகை - 10

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகெட்)

:ப்ரசுரிக்குமிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

October 1949
Vol. 8 No. 10

189264

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	284
2.	உபய வேதாந்த ஐககண்ட்யம்	288
3.	நற்போது போக்த	292
4.	மஹர்ஷி ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி ...	297
5.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	302
6.	ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்	303
7.	செய்திகள்	307
8.	ஸம்பாதகரின் குறிப்புகள்	309

வியாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

வியாஸங்களைத் தெளிவான எழுத்துக்களில் ஒரே பக்கத்தில் பதத்திற்குப்பதம் இடம் விட்டு, பாராக்களையும் நன்கு கண்டு, எழுத்துப் பிழைகள் இல்லாமல், வியாஸங்களைப் பார்த்து அப்படியே அச்சுக்கோர்க்கும் நிலைமையில் எழுதியனுப்ப வேண்டும். தாங்கள் எடுக்கும் மேற் கோள்களுக்கு (பிரமாணங்களுக்கு)க்கூடியமட்டில் ஆகரத்தையும் நன்கு குறிப்பிடுவதுடன் அவைகளுக்குப் பதவுரையோ மொத்த உரையோ எழுதவேண்டும். மேல் கண்டபடி எழுதியனுப்பப்பட்டால் தாமதமின்றி அடுத்த ஸஞ்சிகைகளில் அவை வெளிவர ஸௌகரியமுண்டு. பிரசுரிக்கப்படாத தங்கள் வியாஸங்களைத் திரும்பிப்பெற விருப்ப முள்ளவர்கள் வியாஸங்களை அனுப்பும்போதாவது பிறகாவது போதிய தபால் ஸ்டாம்புகளுடன் தக்கள் விலாஸத்தையனுப்பினால் விளம்பமில்லாமல் திருப்பியனுப்பப்படும்.

ஸ்ரீ அஹோபில மாஹாத்மியத்தைச் சுருக்கமாக மூலத்திற்கு ஒத்தபடி எளிய தமிழ் வசனநடையில் எழுதி, மற்றும் புராணங்களில் சொல்லியிருந்தால் அதையும் எடுத்து எழுதியனுப்புவதுடன் ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் தொடக்கமாக அனுஸந்திக்கப்பட்டுவரும் ஆசாயர்களுடையவும், விசேஷமாக ஸ்ரீ அழகியசிங்கர்களுடைவும் வைபவம், காலம் முதலியவைகளைக் கூடிய வரையில் சுருக்கமாக குருபரம்பரை முதலிய தகுந்த பிரமாணங்களுக்கு ஒத்தபடி வித்வான்கள் நன்கு பராமர்சித்து எழுதியனுப்பினால் 5, 6 மாத ஸஞ்சிகைகளில் அவைகளைத் தொடர்ந்து 4-பக்கம் வீதம் போட ஸௌகரிய முண்டு. இது ஒரு பெரிய கைங்கர்யம். நன்றாய் எழுதப்பட்ட வியாஸத்திற்கு பரிசு கொடுக்கவும் உத்தேசமுண்டு.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 8	விரோதி ௵ ஐப்பசி ௴	ஸஞ்சிகை 10

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

—— :: ——

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதா சந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(எட்டாம் அங்கம்)

[8-ம் ஸஞ்சிகை, பக்கம் 227-ன் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

———:0:———

பணத்தை ஸம்பாதிப்பதும் சேர்ப்பதும் தோஷ மல்ல. அதைத் தானம் செய்து, அதனுல் அகம் மகிழ்ச்சி யுறவேண்டும். அதை உசிதமாக ஸாத்விகாஹாராதிகளுக்குக் குறைவில்லாமல் தானும் கொஞ்சம் அநுபவிக்கவும் வேண்டும். த்ரவ்யத்திற்குத் தானம் போகம் நாசம் ஆகிய மூன்று கதிகள் உண்டு. 'எவன் தானம் செய்யாமலும், உசிதமான முறையில் தானும் புஜிக்காமலும் இருக்கிருனே, அவனுடைய த்ரவ்யத்திற்கு நாசம் என்கிற மூன்ருவது கதிதான் பலிக்கும்' என்னும் ச்லோகத்தை இங்கே நினைக்கவேணும். 'கச்சித் [illegible] யதநம்' என்று நாரதர் தர்மபுத்ரரை விசாரிக்கையில், தர்மபுத்ரர், 'எப்படியிருந்தால் தனம் ஸபலமாகும்?' என்று கேட்டார். அதற்கு நாரதர் '[illegible] யதநம்' என்று பதில் கூறினர். இந்த ச்லோகத்தின் முடிவில் '[illegible]' என்பதால், ஸ்வாமி அந்த நாரதர் வசநத்தை நினைக்கிருர்.

நாரதர்:—அவிவேகிகளுக்குத்தான் தனத்தில் பேராசை இருக்கும். லௌகிக தனத்தில் லோபத்தை விட்டு, வாஸுதேவன் பொற்ருமரை யடியில் பரிசர்யை செய்வதையே உயர்ந்த பொருளாக இப்பொழுது ஜீவன் போற்றுகிருன்.

தும்புரு:— [பரபரப்புடன் சுற்றி நோக்கி] தடுக்கக்கூடாத வேகத்தோடு ஒரு மஹாவீரன் மோஹ ஸேனைகளுக்குத் தைர்யம் சொல்லிக்கொண்டு, இளம் பருவம் நடுப் பருவம் முதிர்ந்த பருவம் ஆகிய மூன்று பருவ ஸ்த்ரீகளையும் தன் படைகளாகக் கூட்டிக்கொண்டு வந்து விவேகனை எதிர்த்து நிற்கிருன். இவன் யாரோ?

நாரதர்:— புஷ்ப பாணனுகிய மன்மதன் இப்படிப் படைகளைச் சேர்த்துக்கொண்டு வருகிருன். ஸ்த்ரீகளில் பருவத்தை அபேக்ஷித்தே தீரவேணுமென்பது இவனுக் கில்லை. காமம் இரண்டு பால்களிலும் கிழத்தனத்தைத் தள்ளிவிடுவ தென்பதில்லை. வயது என்ன ஆனு லென்ன? மனதுக்குள்ளே தாம் இருந்தால் போதாதோ? மனஸிஜன் காமன்.

" [illegible] நம:
[illegible] "

[காமன் தன்னுடைய ஸேனையில் சேர்த்துக்கொள்ளப் பெண்ணுருவ மிருந்தால் போதும் என்பது நாரதர் கூற்று.]

[திரைக்குள்ளிருந்து ஒருவன் அடியிற் கண்ட ச்லோகத்தைப் பாடுகிறுன்]

“ விவெகவரிஷ்ட்வஶஸ்க்ய தவிஶக்திவாராங்கநா
க்ஷணாத் ஹவிஷ்க்ஷண ஶ்ரயித தமவஶ்யதெராவிருத்தகை: ।
ஶ்ருதிப்ரிய தஸ்ஸ்யம் ஶணவிஹாரஶாரிஸ்வதெ
விஶக்திவஶவதீநீ விவரிவதீநீ திஸ்யீதி: ॥ ”

ராம ராவண கதையும் குரு பாண்டவ கதையும் ஸ்வாமி நினைவி லுள்ளன. விவேகர் முதலிய ஸத்வ குணங்களே வடிவான பீஷ்ம விதுராதிகள் கூடிய ஸபையில், பதிகளையே தைவமாகக் கொண்டு மற்றவரைக் கண்ணெடுத்துப் பாராத விரக்தி வடிவான த்ரௌபதியை, ஆஸுர துர்யோதனாதிகள் போன்ற காமமோஹாதிகள் பலாத்காரமாக மயிரைப் பிடித்திழுத்து ஜீவனை விட்டுப் பிரிக்க முயல்கிறார்கள். விரக்தி என்னும் பெண் ஸாதுவான ஜீவனை அணுகவே, காமன் உடனே அவளை மயிரைப் பிடித்துத் தள்ளுகிறான். விரக்தி ஓடிப்போய் மறுபடியும் ஜீவனிடம் காமனே குடிகொள்ளுகிறான். விரக்தியை, ‘வாராங்கனை,’ (வேச்யை) என்று இங்கே கூறுவது, அவள் ஜீவனிடம் சற்று அணைந்த பிறகு உடனே அவன் மனம் காம வசமாகிவிடவே அவள் ஓடிப்போகிறாள் என்பதை ஸூசிக்கலாம். ‘வாரௌ ஸவஸரவாரயொ:’ என்ற நிகண்டுவின்படி ‘வாரம்’ என்பதற்கு ‘அவஸரம்’ ‘ஸமூஹம்’ என்ற இரண்டு பொருள்கள் உண்டு. வைராக்யம் முதல் முதலில் ஸ்வல்ப க்ஷணங்களே இருக்கும். அணைந்தவுடனே அது காமத்தால் துரத்தப்படும். ‘ஸ்மசான வைராக்யம்’ ‘ப்ரஸூதி வைராக்யம்’ என்று உலக ப்ரஸித்தி. விரக்தி த்ருடமாக அணைந்துவிட்டால் அவளைப் பிரிக்கமுடியாது. பதிவ்ரதையாகக் குடிகொண்ட விரக்தியை மயிரைப் பிடித்திழுத்துப் பதியிடமிருந்து பிரிக்கமுடியாது. வேச்யை ஒரே பதியை ஆச்ரயித்துக் குலமகள்போலவே இருப்பதுமுண்டு. ம்ருச்சகடிக நாடகத்தில் வஸந்தஸேனை இதற்கு உதாஹரணம். அவளை சகாரன் மயிரைப் பிடித்துத் தள்ளி யடித்தான். ‘ஶூகக்ஷெ வைநெந விஸஞ்ஜ்ஞ கஷ்டாம் உவாச தாஸீதி ஹஸந் ஸசப்தம்’ என்ற பாரத ச்லோகப்படி துச்சாஸனன் த்ரௌபதியைத் ‘தாஸீ’ என்று உரக்கப் பரிஹஸித்தான். சகுனியும் துர்யோதனாதி மஹா மோஹ படர்களும் அதை அநுமோதித்தார்கள். காம னென்னும் வீரன், முமுக்ஷுக்களை விரக்தி அணுகுகையில் அவளை மயிரைப் பிடித்துத் துரத் தள்ளுவதில் தீரன். மோக்ஷ மார்க்கம் அநாவ்ருத்தி மார்க்கம்; திரும்புவ தில்லாததென்பர். மோக்ஷத்திற்கு எவ்வளவு கிட்டப் போனாலும் காமன் விரக்தியை மயிரைப் பிடித்துத் தள்ளிவிட்டு ஜீவனைத் திரும்பி ஸம்ஸார வழிக்குக் கொண்டு வர வல்லவன் என்று ரஸம்.

[மறுபடியும் உள்ளே யிருந்து காமன் உரக்கக் கூறுகிறான்.]

“ வூஹ த-உவஜ ஊய-உாக-ஷிதுவிதுவ-ூவஹஜ திகஂ
விவஜஜ ஆவ ஜஜாஉ-வ மிஷிதவதை ஹவஹ தஃ ।
கஉ-ஷை கிஂக-ஜெ-உா நிரவயிகுதை நவ-உஜணவவ-ஷெ
நியதை ஹ-குயிஷ்ஂ ஹவத- ஹஹவதை நஉஜ-ஷிழ ॥ ”

க்ருஹத்தை அடியோடு விட்டு ஸந்யாஸாச்ரமத்தைக் கைப்பற்றி விரக்தியையே தழுவி நிற்பவரைப் பூர்வமீமாம்ஸகரான கர்மடர் தூஷிப்பர். அக்நியோடு செய்யும் யஜ்ஞம் முதலிய கர்மங்களை ஜீவனுள்ளவரையில் செய்துகொண்டு தேவர்களுக்கு உழைத்துப் பணிசெய்யவும், பெண்டாட்டியோடு இல்லறம் புரிந்து அக்நிகளை ஆராதிக்கவும், இவர்கள் நம்பும் வேதம் விதித்திருக்கிறது. இவர்கள் பெண்டாட்டிகளை அநாதையாக விட்டுவிட்டு இல்லறத்தைத் துறந்து போவதற்கு, இவர்கள் வேத ஶாஸ்த்ரத்தில் யாதொரு விதியு மில்லை. ‘நதாய ஆஜவித வெதா:’ என்று இவர்களே புகழும் ஜைமினி ஆக்ஷேபிக்கிறார். பார்யை என்னும் பத்நியைப் பர்த்தாவாகிய புருஷன் தானே பரிக்கவேணும். அவளை விட்டுவிட்டு இவன் ஸந்யாஸ வேஷம் பூண்டு ஓடிப்போய்விட்டால் அவளை யார் பரிப்பர்? ‘கூடியே இல்வாழ்க்கை நடத்துவோம்; சேர்ந்தே தர்மங்களைச் செய்வோம்’ என்று ஒருவருக்கொருவர் உறுதி செய்துகொண்டே அக்நியை ப்ரதக்ஷிணம் செய்து அக்நி ஸாக்ஷிகமாக விவாஹம். ‘ஸஹத்வம் ஸவ-உகஉ-உவ-.’ ஸந்யாஸ தர்மத்திலும் ஸஹத்வம் கூடுமோ?

“ வுஜள அ உாதா விதாஉள வாஜீ ஹாய-உாவ-தஸ்ஶி-: ।
கவஜ காய-உஶதஂ கஜதா ஹத-உவஜா உந-ஶவஜவீஷ ॥ ”

என்கிற மாநவ அநுஶாஸநத்தை ‘வூஹத-உவஜஂ’ என்பதால் ஸூசிக்கிறார். ‘ஷ-ஷிது’—இவன் பெண்ணுக்கு இவன் தானே வரன் தேடி விவாஹம் செய்யவேணும். ‘விதா ரக்ஷதி கௌஉாமெ’ என்பதும் இவனுக் கில்லை. ‘ஹத-உா ரக்ஷதி யௌவநெ’ என்பது மில்லை. விது—பிதாவையும் தள்ளாத காலத்தில் இந்த லோகத்திலேயே அநாதையாய் விட்டுப் போகிறான். பரலோகமும் அவனுக் கில்லாமல் ‘புத்’ என்னும் நரகத்தில் அவனை விழும்படி செய்கிறான். இவன் பிதாவுக்கு இவன்தானே க்ரியை செய்யவேணும். தள்ளாத வயதில் இவன்தானே அவனைப் பரிக்கவேணும். இவன் புத்ரனுக்குச் சௌளம் உபநயநம் ரக்ஷணம் முதலியவற்றை இவனே செய்து பரிக்கவேணும். இத்தனை விதிகளையும் கடமைகளையும் மீறி ஒரு ஸந்யாஸ விதி ந்யாய மாகுமோ? இவனுக்கு வைராக்யம் பிறந்தால், பெண்டாட்டிக்கும் வைராக்யம் வந்து விடுமோ? இத்தனை ந்யாயங்களையும் மீறி, ‘யஷஹரெவ விரஜெத் தஷஹரெவ ஆவஜெத்’ என்றொரு விதி என்னும் நியதி, ‘அநுஶாஸநம், நியமநம்,’ இருக்கிறதாம். அந்த நியதியைத் தலையெழுத்து என்கிற நியதியாகத்தான் கொள்ளவேணும். ஶோகிக்கவேணு மென்று ‘நியதி’ பதத்தின் ரஸம். விதி என்பது ஶாஸ்த்ர விதியையும் தலைவிதியையும் சொல்லுவதுபோல. இந்த விதியைப்போல் கொடுமை யுண்டோ? இவர்கள் இந்த எல்லையற்ற கொடுமையான ஸந்யாஸத்தில் விதி இருக்கிற தென்றும், “ஸர்வ ப்ராணிகளுக்கும் என்னிடமிருந்து அபயம்; துயர் லேஶமும் இருக்கக்கூடாது; நான் ஸர்வ

பூதங்களிலும் மைத்ரீ கருணை முதலியவற்றையே பாவநம் செய்கிறேன்' என்று ஸங்கல்பித்துக்கொண்டு, ஸந்யாஸ வ்ரதத்தில் இறங்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்கள். 'விதிர்வா தாரணவத்' என்று இவர்கள் ப்ரஹ்ம ஸூத்ரகாரரும் ஸந்யாஸ விதியை அறுதியிடுகிறார். இந்த விதி தலைவிதிதான். 'ஸர்வங்கஷா பகவதீ பவிதவ்யதைவ' என்று அவச்யம் நடந்தேதீரும் தலையெழுத்து விதியைப் 'பகவதீ' என்று பேசுவர். அதுபோல இங்கே 'நியதி' என்னும் விதியைப் 'பகவதீ' என்று வர்ணிப்பது ரஸம். இந்தத் தலைவிதிக்கு அஞ்ஜலி செய்வோம். 'பூயிஷ்டாம் தே நம உக்திம் விதேம' என்று தினம் தினம் அக்நி ஒளபாஸநத்தில் ஸ்துதி கூறுவர். அக்நியை விட்டொழிக்கும் ஸந்யாஸ விதிக்கு அந்த மந்த்ரத்தில் போல பூயிஷ்ட நமஸ்காரத்தைப் பணிப்போமென்று மன்மதன் திரைக்குள்ளிருந்து பரிஹாஸம் செய்து கூறும் ச்லோகம் இது.

தும்புரு:—மன்மதனுக்குத் தோழனாகப் போர் புரியும் ச்ருங்காரனும் விரக்தி என்னும் பெண்ணால் ஒடுங்கி விழுகிறான். 'யஃ ஸர்வதா த்யஜதி' என்கிற ச்லோக வசநம் 'வக்ஷ்யேऽஹம் ஸர்வதா த்யஜ ப்ரியதமம்' என்கிற ஒரு பெரிய ச்லோகமாக அமைந்துள்ளது. ஸ்த்ரீ ஶரீரத்தைப் பார்த்து மோஹிப்பதை நிந்திக்கும் வசநங்களுக்கு யாவரும் ஶரீரத்தில் அபிமாநத்தை விடவேணுமென்னும் கருத்துமுளதென்று ஸ்ரீ விஷ்ணுசித்தாதிகளின் வ்யாக்யாநம்.

"யதி நாமாஸ்ய காயஸ்ய யதந்தஸ்தத்பஹிர்பவேத் ।
தண்டமாதாய லோகோऽயம் ஶுந: காகாம்ஶ்ச வாரயேத் ॥"

என்ற வசநமும், 'புண்ணை மறைய வரிந்தென்னைப் போரவைத்தாய் புறமே' என்ற திருவாய்மொழியும் இங்கே நினைக்கத்தக்கவை. ஸர்வ ப்ராணிகள் விஷயத்திலும் கருணையும் ஸ்நேஹமுமே வடிவெடுத்தவரான ப்ரஹ்லாதாழ்வான்

"ஸ்வஶரீரவிஶேஷாணாம் ஶ்லேஷ்மாதீநாம் மஹாஶய: ।
ஸ்வகாந்திஶோபாஸௌந்தர்யரமணீயாதயோ குணா: ॥
மாம்ஸாஸ்ருக்பூயவிண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்திஸம்ஹதே ।
தேஹே சேத் ப்ரீதிமாந் மூடோ பவிதா நரகேऽபி ஸ: ॥"

[நரகத்திலும் மேலான இவ்வழுக்குடம்பில் ஒருவன் அதிக ப்ரீதி வைப்பானேயாகில், அவன் நரகத்திலும் ப்ரீதிவைக்கத்தக்கவனே] என்று வர்ணித்ததையும் கவனிக்கவேணும். அதுபோலவே இங்கும்,

"நாரகேஷ்வபி தத்வ்யதாவஹேஷு ரௌரவே ஸ பவது கௌரவேண தீ:"

[அளவற்ற துக்கத்தைத் தரும் நரகமான ரௌரவத்திலும் அவனுக்குக் கௌரவ புத்தி இருக்கட்டும்.] என்று தும்புரு கூறுகிறார். மூன்று லோகங்களிலும் பராக்ரமம் செலுத்தும் காமவீரன் ஒடுங்கினான். இப்பொழுது கிளம்பிவரும் கோபன் இனி நிற்பதற்கு இடமெங்கே? [காமனோடு அவன் மூலமாகக் கிளம்பும் கோபமும் உடன்கட்டை ஏறவேணுமென்று கருத்து.] 'காமவஶ: க்ரோதவஶ:' என்று இரண்டையும் சேர்த்துப் பகவான் பணித்தார்.

[தொடரும்]

ஸ்ரீ:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

[8-ம் ஸஞ்சிகை பக்கம் 229-ன் தொடர்ச்சி.]

இரண்டாம் அடியால் ஜந்மாத்யதிகரண விஷயங்கள் ஸூசந முறையாக மிக்க ரஸமாய்க் காட்டப்படுகின்றன. ப்ரஹ்ம ஸூத்ர ஶாஸ்த்ராரம்பத்தின் முதல் நான்கு அதிகரணங்களாகிய உபோத்காத மென்னும் அவதாரிகையில்,

"யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே । யேந ஜாதாநி ஜீவந்தி ।
யத்ப்ரயந்த்யபிஸம்விஶந்தி । தத்விஜிஜ்ஞாஸஸ்வ । தத்ப்ரஹ்மேதி"

என்கிற ப்ரஹ்ம லக்ஷணமும், ப்ரஹ்ம ஶப்த வ்யுத்பத்தி ப்ரதர்ஶநமும் ப்ரஹ்ம ஜிஜ்ஞாஸை செய்யத்தக்கதென்று அபூர்வமாகப் போதிப்பதுமான,

'ஆநந்தாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே' 'கோ ஹ்யேவாந்யாத் க: ப்ராண்யாத்,' 'யதேஷ ஆகாஶ ஆநந்தோ ந ஸ்யாத்', 'ஸைஷா பார்கவீ வாருணீ வித்யா, பரமே வ்யோமந் ப்ரதிஷ்டிதா'

முதலிய ப்ருகுவல்லீ வாக்யங்களும் ஸூத்ரகாரர் திருவுள்ளத்தில் ஓடுகின்றன வென்பது ஸ்பஷ்டம். 'ஜந்மாத்யஸ்ய யத:' என்கிற இரண்டாவது ஸூத்ரத்தால் ப்ருகுவல்லியி லுள்ள காரண வாக்யம் விஷயமாக ஸூசிக்கப்படுவது ஸ்பஷ்டம். ப்ரஹ்மம் எல்லா ப்ராணிகளுக்குள்ளும் ஹ்ருதய குஹையில் அந்தராத்மாவாக ஸ்ருஷ்டி முதல் இருந்துகொண்டு, அந்தக் குஹையில் தம்மை 'யோ வேத நிஹிதம் குஹாயாம்' என்றபடி உபாஸித்து, 'ஏஷ ஹ்யேவாநந்தயாதி' என்றபடிக்கும்,

'ரஸோ வை ஸ: ரஸம் ஹ்யேவாயம் லப்த்வா ஆநந்தீ பவதி,' 'ஆநந்தமய:' 'யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருஶ்யேऽநாத்ம்யேऽநிருக்தேऽநிலயநேऽபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே, அத ஸோऽபயம் கதோ பவதி'

என்றபடிக்கும், ஸமர்யமாணத்யர்த்த ப்ரியனான ஹ்ருதய குஹாந்தர்வர்த்யாநந்தமய ஸர்வ ஶாரீர ஸர்வாந்தராத்மாவை, 'ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' என்றபடி இன்பமயமாக உபாஸந தஶையான ப்ரஹ்ம நிஷ்டையில் விபுலமான சுத்தமான இன்பமாக அநுபவிப்பித்துக்கொண்டு, அந்த நிஷ்டையால் ப்ரீதனான பரமாத்மாவினுடைய ப்ரஸாதத்தால், '[illegible]' என்றபடி கடைசியான இந்தத் தேஹத்தை விட்டு நீங்குகையில், ஆநந்தமயனான பரமாத்மா

விற்குள் உயிர் வேறின்றி ப்ரவேசிப்பித்து ஶாச்வதப் பேரின்பத்தைப் பெறச் செய்வதை, '𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌭𑌿𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿' அல்லது '𑌯𑌦𑌭𑌿𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿' என்று உபநிஷத் பாஷ்யமும், ஜயதீர்த்த ஸ்வாமியின் தத்வப்ரகாசிகையும் காட்டிய முறையில் லக்ஷண வாக்யத்தின் கடைசி பாகத்தின் பொருளை ஆழ்வார் 'மயர்வற மதிநல மருளினன் யவனவன்' என்று ஸங்க்ரஹித்து, தைத்திரீய லக்ஷண வாக்யத்தை ஸூசிக்கிறார்.

"𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌪𑍍𑌰𑌲𑌯𑍇, 𑌯𑌸𑍍, 𑌚𑌾𑌭𑌿, 𑌸𑍇𑌶𑍍𑌵𑌰𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌜𑌨𑍍𑌤𑌵𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿 𑌅𑌤𑍍𑌰"

என்பது ஸ்ரீ ஜயதீர்த்தருடைய டீகை. நித்ரை முதலிய அவஸ்தைகளில் லய மென்னும் ப்ரஹ்ம ப்ரவேஶ மிருந்தாலும் அது தன் இச்சையா லில்லை; தனக்கு ஜ்ஞாந பூர்வகமாகவு மில்லை; அது ஸம்யக்கான ப்ரவேஶமு மல்ல. மோக்ஷத்தில்தான் திரும்பி மீளாத ஶாச்வதமான இன்ப லயம். உபநிஷத் பாஷ்யமு மிப்படிப் பொருள் உரைத்தது.

"𑌕𑍍𑌷𑌦𑌾 𑌶𑍍𑌰𑌿𑌤𑌾𑌨𑌾𑌂 𑌜𑌗𑌦𑍁𑌤𑍍𑌭𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌸𑌂𑌸𑌾𑌰𑌵𑌿𑌮𑍋𑌚𑌨𑌾𑌦𑌯𑌃"

என்று கடைசியில் ப்ரளயத்திற்குப் பிறகு ஸம்ஸார விமோசநத்தைக் குறித்ததும் இதை அநுக்ரஹிக்கும். '𑌪𑍍𑌰𑌯𑌨𑍍𑌤𑌿 𑌅𑌭𑌿𑌸𑌂𑌵𑌿𑌶𑌨𑍍𑌤𑌿' என்று சேர்த்து ப்ரளய பரமாக அந்வயிப்பதிலும், ப்ரளய மென்பது ஆத்யந்திக லயமான மோக்ஷத்தையும் உட்கொள்ளு மென்பதை ச்ருதப்ரகாஶிகை விளக்கிற்று. மோக்ஷ ஸாதநமான பக்தி யென்னும் ப்ரீதி ரூபாபந்நமான ஶேஷ்யநுபவ ரஸத்தின் அஸங்குசிதமான நித்யாநுவ்ருத்தியே ஸாத்யமாகிய மோக்ஷம். ஸாத்யத்தைப்போல் ஸாதநமும் லோக 𑌸𑍁𑌖 விலக்ஷணமான பேரின்ப ரஸம். இந்த ஸாதநமும் ஸாத்யமும் '𑌦𑌦𑌾𑌮𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌯𑍋𑌗𑌂 𑌤𑌂 𑌯𑍇𑌨 𑌮𑌾𑌮𑍁𑌪𑌯𑌾𑌨𑍍𑌤𑌿 𑌤𑍇' என்ற கீதைப்படிக்கும், '𑌯𑌮𑍇𑌵𑍈𑌷 𑌵𑍃𑌣𑍁𑌤𑍇' என்கிற ச்ருதிப்படிக்கும், பகவானிடத்தில் மிக்க ப்ரீதியுள்ள பகவத் ப்ரியதமர்களைப் பகவான் தன்னருளால் வரித்து அளிப்பதால்தான் கிடைக்கும். இந்த அம்ஶங்க ளெல்லாம் முதல் அதிகரணத்திலேயே ஸ்ரீ பாஷ்யமும் ஸ்ரீமத்வ பாஷ்யமும் விளக்கின. ஸ்ரீ ஶாங்கர பாஷ்யமும் பல விடங்களில் விளக்கிற்று. ப்ரஹ்மத்திற்குத் தைத்திரீய லக்ஷண வாக்யத்தில் கூறப்பட்ட ஸ்ருஷ்டி நியமந ஸம்ஹார மோக்ஷ ப்ரதத்வங்கள் பரஸ்பர விருத்தமானவை யென்றும், ஸ்ருஷ்டிப்பவனே ரக்ஷிப்பவனே ஸம்ஹாரம் செய்யமாட்டா னென்றும், ஸ்ருஷ்டி முதலானவைகளைச் செய்து ப்ராணிகளை ஸம்ஸாரத்தில் பாஶத்தால் கட்டி யழுத்துகிறவன் ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை செய்யமாட்டா னென்றும், இப்படி ஒன்றுக்கொன்று விருத்தமான செய்கைகளைச் செய்யும் காரண வஸ்துக்கள் வெவ்வேறான அநேக வஸ்துக்களாக இருக்கவேண்டு மென்றும், ஒரே ப்ரஹ்மத்திற்கு இப்படி விருத்தமான பல செய்கைகள் கூடா வென்றும், ஆகையால் இந்த ப்ரஹ்ம லக்ஷண வாக்யம் ஏகப்ரஹ்ம லக்ஷண வாசகமாக ஸம்பவிக்கமாட்டா தென்றும் பூர்வ பக்ஷம் இங்கே காட்டப்பட்டது. ஸ்ருஷ்டி, நியமநம், ப்ரளயம் முதலிய எல்லா வ்யாபாரங்களும் பகவானுடைய அருளாலேயே எல்லா ப்ராணிகளையும் மோக்ஷ ஸாதநாதிகளான ஐஹிகாமுஷ்மிக போக வைராக்யம், இன்ப

மயமான ஸர்வ காரண பரமாத்ம த்யாநம் முதலியவற்றில் கூட்டிவைக்கவே செய்யப்படுகின்றன. மோக்ஷமென்னும் வீடு சேர்ப்பிப்பதே பகவானுடைய முக்ய கருத்து, பரம உத்தேச்ய மென்று கீதாபாஷ்யம் முதலியவைகளும், ஸர்வ விரோதங்களையும் பரிஹரித்து ப்ரஹ்மத்தின் ஸர்வ வித ஸர்வ காரணத்வத்தையும் த்ருடப்படுத்தும் இரண்டாம் அத்யாயத்தி லுள்ள லீலா ஸூத்ரமும், அந்த அதிகரணமும், தயாஶதகாதிகளும் நன்கு விளக்கின.

"அசிதவிஶேஷிதாந் ப்ரளயஸீமநி ஸம்ஸரத:
கரணகளேபரைர் கடயிதும் தயமாநமநா: ।
வரத நிஜேச்சயைவ பரவாநகரோ: ப்ரக்ருதிம்
ஸஹஜஸிதா நகிரணாவலிகோசகிணீம் ॥"

என்ற ஸ்ரீரங்கராஜ ஸ்தவமும் அதை விளக்கிற்று. எல்லா பாஷ்யாதி க்ரந்தங்களும் இந்த விஷயத்தில் ஏககண்டம். இதை விஸ்தாரமாகத் தயாஶதக வ்யாக்யாநத்தில் காட்டியுள்ளோம். மற்ற ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களெல்லாம் சேதநர்களை வீடு சேர்ப்பிக்கும் கருத்தைக்கொண்டே அருளால் செய்யப்படுவதால், விருத்தப்போலும் நிஷ்கருணம் போலும் தோன்றும் இந்த ஜகத் வ்யாபாரங்களெல்லாம் ஒரே காரண ப்ரஹ்மத்தின் செயலல்ல வென்று சொல்ல முடியாது. 'அருளினன்' என்பதாலும், ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களெல்லாம் ப்ராணிகளுக்கும் தமக்கும் பரம ப்ரயோஜநமாயுள்ள மோக்ஷ ஸாதந ஸம்யோஜந மோக்ஷ ப்ரதத்வங்களையே கருதியவை யென்கிற விரோத பரிஹார முறையை ஸூசித்து, இரண்டாம் அதிகரணத்தின் ஸூக்ஷ்மாம்ஶங்களை விளக்குகிறார். 'ஸஹயஜ்ஞா: ப்ரஜா: ஸ்ருஷ்ட்வா' என்கிற கீதா ச்லோகத்தின் பாஷ்யத்தில், "அசேதநம்போல் ப்ரளயத்தில் கிடக்கும் ப்ரஜைகளைக் கடாக்ஷித்து அவர்களை உஜ்ஜீவிப்பித்து உளராக்கு மிச்சையால் பரம காருணிகனுய்ப் பகவதாராதந ஸாதநங்களோடுகூட ஸ்ருஷ்டிக்கிருர்" என்றும், அங்கு தாத்பர்ய சந்த்ரிகையில், "காருணிகர்கள் ஸ்வப்ரயோஜனத்தை அபேக்ஷிக்காமல் பிறரை உஜ்ஜிவிப்பிக்கவேண்டு மென்றே ப்ரவ்ருத்திப்பர்; அந்த ப்ரவ்ருத்தியே தான் லீலையுமாகும்" என்றும் ஸாதிக்கப்பட்டது. இங்கே முதலடியில் ஸூசிக்கப்படுவதும், காரண ப்ரஹ்ம த்யாநத்தால் ஸம்ஸார விமோசநம் பெறுவதை விசாரித்துத் தீர்மானித்து உபதேசிக்கும் ப்ரஹ்ம மீமாம்ஸா ஶாஸ்த்ராரம்பத்தை ப்ரதிஜ்ஞாநம் செய்யும் முதல் ஸூத்ரத்தி லுள்ளதுமான ப்ரஹ்ம ஶப்தம் ஆநந்த ஶப்த பர்யாய மென்றும், தைத்திரீயத்தில் 'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' என்று ப்ரஹ்ம ஶப்தத்தோடு தொடங்கி ஆநந்த மீமாம்ஸை செய்துகொண்டும். 'தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்மேதி' என்று தொடங்கி, 'ஆநந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத்' என்று முடித்தும், 'யதோவா' என்று பொதுவாகத் தொடங்கி ப்ரஹ்ம ஶப்தத்தை ப்ரயோகித்து, முடிவில் 'ஆநந்தாத்த்யேவ' என்று நிர்ணயம் பணித்திருப்பதையும் ஸூசித்துக்கொண்டு, 'நலம்' என்னும் ஆநந்த வாசக ஶப்தத்தினுலும், 'நலமுடையவன்' என்று 'ஆநந்தமய' வாசக ஶப்தத்தாலும் ப்ரஹ்மத்தைக் குறிக்கும் ரஸமும் கவனிக்கத்தக்கது. இதை முன்பே விஸ்தரித்துள்ளோம். உயர்வற உயர்நல மருளப்பெறும்பொழுதுதான் உண்மை

யான பிறப்பு என்பதும், 'அன்று நான் பிறந்திலேன் பிறந்தபின் மறந்திலேன்' என்பதும் இவ்வாழ்வார்கள் ஸித்தாந்த மாகையால், ஜன்ம ப்ரத்வம்ஸி ஜன்மமான ஜ்ஞாநப் பிறப்பாகத் திருவுள்ளம்பற்றி, 'யதொவாஉாமி ஹஔதாமி ஜாயஞெ' என்ற முதல் பாகத்தையே இரண்டா மடியால் மயர்வற மதிநலத்தோடு ஞானப்பிறப்பை ஸூசிப்பதாகவுங் கொள்ளலாம். முராரி நாடகத்தில் விச்வாமித்ரரை மால்யவான் 'த்ரிஜாதகர்' என்று பரிஹஸித்தான். க்ஷத்ரியராய்ப் பிறந்து, உபநயநாதி ஸம்ஸ்காரத்தால் க்ஷத்ரிய த்விஜராகி, பிறகு தபஸ்ஸால் ப்ராஹ்மண ஜன்மம் பெற்று த்ரிஜாதகரானு ரென்று அவன் பரிஹாஸம். 'சுஹ்ம்வெதூிஉஹாதூா நழ' என்றபடி ப்ரஹ்மவிசக்ரேஸரரான அவர் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தால் பிறந்த ஏகஜாதகர் என்று சொல்வது உசிதமாகும். அவன் குறித்த மூன்று பிறப்புகளையும் பிறப்புகளாகச் சேர்த்துக் கணக்கிட்டாலும் சதுர்ஜாதக ரென்று சொல்லவேணும். இவ்வடியில் 'மதிநல' மென்று பாடியதை நிரந்தர பத்தி ஜ்ஞாநமாகமட்டும் கொண்டாலும், கீதையில் பக்தியோக ஷட்கத்தின் முடிவு ச்லோகமான 'யெத-யஉஷூாஉஜ தவிஷழ' என்ற விடத்தில், 'யஉஷூழ' என்பதற்கு ஸாதநமான பக்தி யென்றும், 'சுஜ தழ' என்பதற்கு மோக்ஷப் பேரின்ப மென்றும் பொருளைக்கொண்டு 'யெத-வூாவயூஸஉம் வூாவகும்ஹகூியொமழ' என்று கீதா பாஷ்யத்தில் ஸாதநமான மதிநலம் ப்ராப்யமான மதிநலத்தைப்போல் அம்ருதாநந்த மென்று காட்டியதையும், ஸ்ரீ பாகவதத்தில் 'சுமிஃதூா ஹமவதி ஹகூிஃ ஸிஜெஹஉஸீயஸி' முதலிய வசநங்களால் முக்தியிலும் பெரும் பேருகக் காட்டியதையும் நினைக்கவேணும். தைத்திரீய ச்ருதி லக்ஷண வாக்யத்தில் கூறிய வ்யாபாரங்கள் தனித்தனியே லக்ஷணமாகும் முறையையும், சேர்ந்து ஒரு லக்ஷணமாகும் முறையையும், ஆழ்வார் இப்பாசுரத்தில் 'யவனவன் யவனவன்' என்று திரும்பவும் திரும்பவும் படிப்பதால் விளக்குவதை முன்பே விஸ்தரித்துள்ளோம். ப்ரஹ்ம ஸ்வரூபாதிகளை உபலக்ஷணம் செய்யும் முறையிலும் தைத்திரீய ச்ருதியை அநுஸரித்த இப்பாசுரம் மிக அழகாகக் காட்டும் முறையை ஸூசிப்போம். ஜகத் ஸ்ருஷ்டி ஸ்தித்யந்தர் நியமநாதி வ்யாபாரங்களால் ப்ரஹ்மத்திற்குத் தேச கால வஸ்து பரிச்சேத மற்ற ஆநந்த்யமாகிய ப்ருஹத்வத்தை 'யதோவா' முதலிய ச்ருதி வாக்யங்கள் பூர்வ ப்ரதிபந்நாகாரமாக ஸமர்ப்பித்த பிறகு, இத்தனை வ்யாபாரங்களும் சேதநர்களுக்கு ஸாதநமாந இன்ப வெள்ளமோடும் பக்தியில் சேர்ப்பித்து அயர்வறு மமரர்கள் திருவோலக்கத்தில் சேர்ப்பித்துத் தமக்கு மீட்டுக்கொள்ளவேண்டு மென்னும் 'அருளையே' மூலமாகக் கொண்ட தென்கிற ப்ரஹ்மத்தின் ஸ்வபாவமான நிரதிசய கருணையை உபலக்ஷ்யமான அபூர்வா ஜ்ஞாதாகார மென்பதை ஆழ்வார் இந்த லக்ஷண ஸூத்ராதிகரண விளக்கமாகிய இந்த இரண்டா மடியில் உபதேசிக்கும் அழகு ரஸிக்கத்தக்கது. இங்கே மதிநல மருளுவதும் அயர்வறு மமரர்களோடு சேர்க்கவே யென்பதை அடுத்த அடியில் ஸ்பஷ்டமாய் ஸூசிக்கிறார். 'விநதவிவியஹஔதவ ாதஈ ஷெக்ஷகஷீஷெக்ஷ' என்று ஸ்ரீ பாஷ்ய மங்கள ச்லோகத்தின் இரண்டாம் அடியிலும், 'உவலக்ஷூும் ஷி சுநவயிகாதிஶய வைஜஹகி வைஹூணம் அ' என்கிற ஜந்மாத்யதிகரண பாஷ்ய ஸ்ரீஸூக்தியிலும் ஆழ்வாரின் இக்கருத்து அழகாக ஸூசிக்கப்பட்டது. [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

நற்போது போக்கு

[ஸௌபரி முனிவர் சரித்ரம்]

[ஸ்ரீ. உப. K. ஸுந்தர்ஶநாசார்யர், தமிழ்ப் பண்டிதர், பெருமாள்கோவில்]

பண்டைக் காலத்தில் மாந்தாதா என்னும் சக்ரவர்த்தி ஶஶிபிந்து மன்னனின் பெண்ணான இந்துமதியை மணம் செய்துகொண்டு, அவளிடம் புருகுத்ஸு வென்றும் அம்பரீஷ னென்றும் முசுகுந்த னென்றும் மூன்று புதல்வர்களைப் பெற்றான். கால க்ரமத்தில் அவ்வரசனுக்கு ஐம்பது பெண்கள் உண்டாயினர். இது நிற்க:

மறைகள் யாவற்றையும் ஓதியுணர்ந்த தவத்தில் மிக்க ஸௌபரி என்னும் முனிவர் நீருக்குள் பன்னிரண்டு வருஷங்கள் வஸித்து வந்தார். அந்நீருக்குள் மிகுந்த மக்களை யுடையதும், மிகவும் பெரியதும், 'ஸம்மத' மென்று பெயருள்ளதுமான மீன் ஒன்று பல மீன்களுடன் வஸித்து வந்தது. அம் மீன் தனது பெண்டு பிள்ளை பேரன் முதலிய மீன்களுடன் இராப்பகலாய் விளையாடி இன்பமுற்று வந்தது. பெண்டு பிள்ளைகளின் ஸ்பர்ஶத்தால் இன்பமுற்று வந்த அம்மீன், அம்முனிவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே தினந்தோறும் தனது பந்து வர்க்கங்களுடன் நன்றாய் க்ரீடித்து ஸுக போகங்களை அநுபவித்து வந்தது. அதனைப் பார்த்த ஸௌபரி முனிவர் ஸமாதி குலைந்து, தம் மனத்தை வேற்றிடம் செலுத்துவதை நிறுத்தி, ப்ரதி தினமும் அம்மீன் தன் பெண்டு பிள்ளை பேரன்களுடன் ஸந்தோஷமாய் விளையாடுவதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி கொண்டு, "அந்தோ! தாழ்ந்த யோனியில் உண்டாகியும், தனது பெண்டு பிள்ளை பெண் பேரன் முதலிய மீன்களுடன் க்ரீடிக்கும் இம்மீன் எனக்கு மிகவும் ஆசையை உண்டாக்குகிறது; நானும் இவ்வாறு புத்ரன் முதலியவர்களைப் பெற்று அவர்களுடன் கூடிக் குலாவி இன்பமடைய மாட்டேனா?" என்று அவாக் கொண்டு, அம் முனிவர் நீரினின்றும் வெளிப்போந்து, மணம் செய்து கொண்டு மக்களைப் பெற விருப்ப முடையராய்க் கன்னிகைகளை அவடைவதற்காக மாந்தாதா வென்னும் மன்னவனை அடைந்தார். ஸௌபரி முனிவரின் வருகையைக் கேட்டு மாந்தாதா ஆஸநத்தினின்றும் எழுந்து விதிப்படி பூஜித்து அவரை ஆஸநத்தில் அமர்த்தினான்.

பின்பு ஸௌபரி முனிவர் மன்னவனைப் பார்த்து "ஹே ராஜாதிராஜ! உனது கன்னிகைகளை நாடி நான் உன்னை அடைந்தேன்; அவர்களை மணம் புரிய விரும்புகிறேன்; தடை கூறாது அவர்களை எனக்குக் கொடுக்கக் கடவாய்; எனது அன்பைக் குலைத்து விடாதே; ககுத்ஸ்த வம்ஶத்தாரிடம் கார்ய நிமித்தம் வந்த யாசகர்கள் தங்கள் கார்யம் நிறைவேறாமற் செல்வ

தில்லை; பூமியில் பல மன்னர்கள் இருக்கின்றனர்; ஆனால் யாசகர்களுக்கு, அவர்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதையே வ்ரதமாகக் கொண்ட உனது குலம் அவர்களுடைய குலத்தினும் மிகவும் சிறந்தது; என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யக்கடவாய்" என்றார். அதனைக் கேட்டு அவ்வரசன் மூப்பினால் தளர்ந்து என்பெடுத்த யாக்கையையுடைய முனிவரைப் பார்த்து, அவர் சொல்லை மறுத்தால் ஸாபத்துக்கு ஆளாவோமே என்று அஞ்சிப் பதில் சொல்ல இயலாமல் தலை குனிந்துகொண்டு நெடுநேரம் யோசித்தான். பின்பு ஸௌபரி முனிவர், "மன்னவ! என் யோசிக்கின்றாய்? செய்யக்கூடாத காரியத்தைச் செய்யும்படி நான் உன்னிடம் சொல்லவில்லையே! அவச்யம் மணம் செய்து கொடுக்கவேண்டிய கன்னிகையைத் தானே கேட்டேன்; என் பதில் சொல்லத் தயங்குகின்றாய்?" என்றார். பின்னர் அவருடைய ஸாபத்திற்குப் பயந்த வேந்தன் வணக்கத்துடன், "பெருமை பொருந்திய முனிவரே! கன்னிகைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வரன்களுக்கே பெண்களைக் கொடுப்ப தென்பது எங்கள் குலாசாரம்; தேவரீர் வேண்டுகோள் எங்கள் க்ஷத்ரிய தர்மத்துக்கு விருத்தமா யிருக்கிறது; என்ன சொல்வதென்று தெரியவில்லை; இதைத்தான் யோசிக்கிறேன்" என்றான். அதனைக் கேட்டு முனிவர் தமக்குள், 'நமது வேண்டுகோளை மறுப்பதற்கு இது ஒரு நல்ல உபாயம்; இக்கிழவன் ஸ்த்ரீகளால் அருவருக்கத் தக்கவன்; கந்நிகைகளுக்கு உரியவனல்லாதவன் என்று யோசித்து இவன் இவ்வாறு கூறுகிறான்; ஆயினும் இவ்விஷயத்தில் குன்றாது முயற்சி செய்வோம்' என்று தீர்மானித்து மாந்தாதாவை நோக்கி, "அப்பா! உங்கள் குலாசாரம் இவ்வாறானால் அதைக் குலைக்க எனக்கு மனமில்லை; ஆயின் ஒன்று கூறுகின்றேன்; கூர்ந்து கேள். கந்நிகைகளின் அந்தஃபுரத்துக்குச் செல்லவேணும் எனக்குக் கட்டளைகொடு; உன் கந்நிகைகளில் யாரேனும் ஒருத்தி என்னை மணக்க விரும்பினால், அப்பொழுது நான் அவளை விவாஹம் செய்துகொள்கிறேன்; ஒருவரும் விரும்பாவிடில், காலங் கடந்துவிட்டமையால் விவாஹம் வேண்டாமென்று திரும்பி விடுகிறேன்" என்று கேட்டுக்கொண்டார். முநிவர் ஸாபத்தினின்றும் பயந்த மாந்தாதா, அவர் சொல்லை மறுக்க முடியாதவனாய்த் தன் அந்த:புரக் காவலாளனைக் கொண்டு முநிவரைக் கந்நிகா மாடத்துக்கு அழைத்துச் செல்லும்படி கட்டளை யிட்டான். முனிவர் அக்காவலாளனுடன் கந்நிகா மாடத்துக்குச் செல்லும்பொழுதே மந்மதாகாரமானதொரு மனோஹரமான ரூபத்தையெடுத்துக்கொண்டு அந்த:புரத்துக்குள் நுழைந்தார். நுழைந்தவுடன் காவலாளன் கந்நிகைகளைப் பார்த்து, "இந்த ப்ரஹ்ம ருஷியானவர் உங்களை மணக்க விரும்பி இவ்விடம் வந்திருக்கிறார்; உங்களில் யாரேனும் அவரை வரித்தால் யாதொரு தடையுமின்றி உங்களை அவருக்குப் பாணிக்ரஹணம் பண்ணிக் கொடுப்பதாக உங்கள் தந்தையார் ப்ரதிஜ்ஞை செய்திருக்கிறாராம்; அதனை உங்கட்குத் தெரிவிக்கும்படி அவரது கட்டளை" என்று கூறினான். கேட்டது தான் தாமதம். கந்நிகைகள் யாவரும் மிகுந்த மோஹத்துடன், பிடிகள் வேழத்தை விழைவது போல ஒவ்வொருவரும் 'நான் முன்னே நான் முன்னே' என்று போட்டி யிட்டு விரைந்து வந்தார்கள். அவர்களுள் ஒருத்தி,

'ஸஹோதரிகளே! நானே இப்புருஷனை மணப்பேன்; இப்புருஷன் உங்களில் ஒருத்திக்கும் தகுதி யல்லன்' என்றாள். மற்றொருத்தி, 'இப்புருஷனை ப்ரஹ்மா எனக்காகவே படைத்திருக்கிறான்; ஆதலின் அவர் எனக்கு உரியவரே; நீங்கள் விலகுங்கள்' என்றாள். 'முதன் முதல் நான் தான் இவரைப் பார்த்து வரித்து விட்டேன்; ஆதலின் அவர் எனக்கன்றி வேறொருவர்க்கும் உரியவராகார்' என்றாள் ஒருத்தி. 'இப்புருஷன் அந்த:புரத்தில் நுழையா விட்டால் என்ன செய்வீர்கள்? ஆதலின் இவர்மேல் நீங்கள் ஆசைவைப்பதே தவறு; அவர் எனது கணவரே' என்றாள் வேறொருத்தி. இவ்வாறு ராஜ கந்நிகைகளுக்குள் அப்புருஷனுடைய மணம் காரணமாகச் சண்டை யுண்டாயிற்று. சிறந்த புகழையுடைய அம்முனிவர் எல்லாக் கந்நிகைகளாலும் அன்புடன் வரிக்கப் பட்டபொழுது, அதைப் பார்த்த அக்காவலாளன் நடந்த செய்தியை மறையாது மன்னனிடம் மொழிந்தான்.

வேந்தன் என் செய்வான்! அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. தன் கந்நிகைகளை அவருக்கு மணம் செய்து கொடுக்கத் தனக்கு மன மில்லாவிடினும் ச்ரமப்பட்டு ஒப்புக்கொண்டான். பிறகு தன் கந்நிகைகள் ஐம்பதின்மரையும் முனிவருக்கு மணம் செய்வித்தான். மணம் முடிந்ததும் முனிவர் அக்கந்நிகைகள் யாவரையும் தமது ஆச்ரமத்துக்கு அழைத்துச் சென்றார். அங்கு, சித்ர வேலையிற் கைதேர்ந்தவனும், ஸ்ருஷ்டி செய்வதில் சதுராநநனுக்கு ஸத்ருஶமானவனுமான விச்வகர்மாவை யழைத்து, ஒவ்வொரு பெண்ணுக்கும் தனித்தனியாக, நல்லன்னம் உறையும் நற்றாமரைக் கயமும், நாகணவாய்ப்புள் கிளி முதலிய பக்ஷி ஜாலங்கள் நிறைந்த மநோஹரமான ஓடைகளும், உத்யாந வநங்களும், ஸம்போக ஸாதநங்கள் நிறைந்த பள்ளியறைகளும், இவைகளுடன் விளங்கும் விஶாலமான மாட மாளிகைகளை நிர்மிக்கும்படி நியமித்தார். விச்வகர்மாவும் முனிவர் கட்டளையிட்ட வண்ணம் கண்ணைக் கவரும் மாளிகைகளைக் கணத்திற் கட்டி முடித்தான். அம்முனிவரின் கட்டளையால் ஒவ்வொரு மாளிகையிலும் 'நந்தநம்' என்னும் மஹா நிதி இருந்தது. வேலையாட்கள் எப்பொழுதும் பக்ஷணங்கள் பழங்கள் போஜநங்கள் முதலிய போக ஸாதநங்களால் எல்லா மாளிகைகளிலும் ராஜ கந்நிகைகளை த்ருப்தி செய்வித்து வந்தனர். இப்படி ஒன்றாலொன்று குறைவில்லாமல் அவர்களின் குடும்ப வாழ்க்கை ஸம்ப்ரமமாக நடந்து வந்தது.

ஒரு ஸமயம் மாந்தாதா தனது பெண்களின் நிலைமையை அறிய அவாக்கொண்டு அம்முனிவரின் ஆச்ரமத்தை அடைந்தான். அண்மையிற் சென்றதும், ஒளி வீசப்பெற்றதும், மநோஹரமான ஓடைகளையுடையதும், ஸ்படிகக் கல்லால் அமைக்கப்பட்டதுமான மாளிகையைக் கண்ணுற்றுப் பெரு வியப்புற்றான். ஒரு மாளிகையில் நுழைந்து, தன் பெண்ணைப் பார்த்து மகிழ்ந்து ஆஸநத்தில் அமர்ந்து ஆநந்தக் கண்ணீர் சொரிந்து, "அம்மா! பெண்ணே! நீ ஸுகமாயிருக்கிறாயா? துன்பப்படுகிறாயா? முனிவர் உன்னிடம் அன்புடன் இருக்கிறாரா? நமது மாளிகை வாஸத்தை நினைக்கிறாயா?" என்றான். அது கேட்ட அப்பெண், "அப்பா! இம்மாளிகை மிகவும் அழ

கான உத்யாந வநத்தாலும், மநோஹரமான மலர்ந்த தாமரை மலர்கள் நிரம்பிய ஓடைகளாலும், மதுரமாகக் கூவும் பறவைகளாலும் நிறைந்திருக்கின்றது பார். இதன் அழகு வர்ணிக்கமுடியாது. மனதுக் கிசைந்த மலர்கள், வாய்க் கினிய பக்ஷ்ய வர்க்கங்கள், உண்பதற் குகந்த உணவு வகைகள், வாஸனை த்ரவ்யங்கள், வனப்பு வாய்ந்த வஸ்த்ர பூஷணங்கள், முதலிய போகங்களை அநவரதம் அநுபவிக்கின்றேன்; மலரினும் மெல்லிய படுக்கையில் படுக்கி றேன். எனது இவ்வில்லறம் ஸகல ஸம்பத்தாலும் நிறைந்திருக்கிறது. ஆனல் எனக்கு ஒரு வருத்த முண்டு. அது என்னவென்றல் :— எனது கணவர் என் வீட்டை விட்டு வெளிச் செல்வதே யில்லை; என்னுடன் எப்போதும் அன்புடன் ஸமீபத்தி லிருக்கிறர்; எனது ஸஹோதரிகளிடம் செல்வதில்லை; அது காரணமாக அவர்கள் என் மீது வருத்தம் கொள்வார்களே யென்பது தான் எனது கவலைக்குக் காரணம்" என்றள். பின்பு மன்னவன் இரண்டா வது மாளிகைக்குச் சென்று தன் பெண்ணைக் கண்டு முன்போல் க்ஷேமம் விசாரித்தான். அவளும் தன் மாளிகை முதலியவைகளின் போகத்தால் உண்டா கிய ஸுகத்தைத் தெரிவித்து, "அப்பா! எனது கணவர் என் ஸதா ஸமீபத்தி லிருக்கிறர்; எனது ஸஹோதரிகள் விஷயத்தில் அவர் இவ்வாறில்லை" என்று தெரிவித்தாள். அதனைக் கேட்ட வேந்தன், இவ்வாறே எல்லா மாளிகைகளி னுள்ளும் நுழைந்து பெண்களை முன்போல் வினவினன். பெண்கள் யாவரும் முன்போலவே கூறினர்கள். கேட்டான் மன்னன். அவன் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இப்படி ஸந்தோஷாச்சர்யாதிகளால் பரவஶ மான மனத்தையுடைய மன்னன், தனியே ஓரிடத்தில் வீற்றிருக்கும் பெருமை பொருந்திய ஸௌபரி முனிவரை யடைந்து, அவரால் பூஜிக்கப்பட்டபின், அவரை நோக்கி, "ஹே! பகவன்! தேவரீர்களுடைய ஸித்தி ப்ரபாவம் இப்பொழுதுதான் தெரிய வந்தது; என் அபராதங்களை க்ஷமித்தருள வேண் டும். இத்தகைய ஸம்பத் ஸம்ருத்தியை வேறிடத்தில் நான் கண்டதே யில்லை. தேவரீர்களுடைய தவச் செல்வத்திற்கு இந்தச் செல்வம் எவ்வளவு! நான் தந்யனுனேன்" என்று முகமன் கூறி, அம்முனிவரைக் கொண்டாடி, அம்முனி வருடன் அங்கேயே சில காலம் வஸித்து இன்பத்தை அநுபவித்துப் பின்பு தனது பட்டினம் சென்றன்.

நாட்கள் சென்றன. முனிவருக்கு ராஜ கந்நிகைகளிடம் நூற்றைம் பது புதல்வர்கள் உண்டாயினர். மக்களிடம் மிகுந்த காதல் கொண்ட அம் முனிவர், ஸந்தோஷத்தால் செருக்கடைந்து, நான் எனது என்னும் அஹங் கார மமகாரங்களினல் நிறைந்து, "எனது புதல்வர்கள் மழலைச் சொற்களைப் பேசுவார்களா? அவற்றைக் கேட்டு மகிழ்வேன? தவழ்ந்து நடப்பார்களா? அதைக் கண்டு இன்புறுவேன? இவர்களுக்கும் யௌவநம் உண்டாகுமா? இவர்கள் தங்கள் மனைவிகளுடன் கூடிக் களிப்பதைக் காணும் பாக்யம் எனக்குக் கிடைக்குமா? இவர்களுக்கும் புதல்வர்கள் உண்டாவார்களா? இவர்கள் பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் உண்டாவதையும் பார்ப்பேன? அவர் களுடன் கூடிக் குலாவுவேன?" என்றிவ்விதமாய் மநோராஜ்யம் செய்து,

முடிவில், "அந்தோ! எனக்கு மோஹம் மிகுந்து விட்டதே! எனக்கேன் இத்தகைய மோஹம் உண்டாகவேண்டும்!

"𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌨𑌾𑌂 𑌨 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑌿 𑌵𑌰𑍍𑌷𑌾𑌯𑍁𑌤𑍇𑌨𑌾𑌪𑌿 𑌤𑌥𑌾𑌬𑍍𑌦𑌲𑌕𑍍𑌷𑍈𑌃 ।
𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌪𑍁𑌨𑌰𑍍𑌨𑌵𑌾𑌨𑌾𑌮𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌯𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑌿
𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌨𑌾𑌮𑍍 ॥"

[பதினாயிர வர்ஷங்கள் இன்பத்தை யநுபவித்தாலும், லக்ஷம் வர்ஷங்கள் இன்பத்தை யநுபவித்தாலும், மநோரதங்கள் முடிவடைவ தென்பதில்லை. மநோரதங்கள் நிறைவேறிவிட்டால் மறுபடியும் மநோரதங்க ளுண்டாகின்றன.]

"𑌪𑌦𑍍𑌭𑍍𑌯𑌾𑌂 𑌗𑌤𑌾 𑌯𑍌𑌵𑌨𑌿𑌨𑌶𑍍𑌚 𑌜𑌾𑌤𑌾 𑌦𑌾𑌰𑍈𑌶𑍍𑌚 𑌸𑌂𑌯𑍋𑌗𑌮𑌿𑌤𑌾𑌃 𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌾𑌃 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑍁𑌤𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌨𑌯𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑌾𑌞𑍍𑌛𑌤𑌿 𑌮𑍇𑌽𑌨𑍍𑌤𑌰𑌾𑌤𑍍𑌮𑌾 ॥"

[பிள்ளைகள் நடந்தார்கள்; யௌவந மடைந்தார்கள்; மனைவிகளுடன் சேர்ந்தார்கள்; பிள்ளைகளைப் பெற்றார்கள்; அவர்களைப் பார்த்து மகிழ்ந்தேன்; அப்பிள்ளைகளின் மக்களைப் பார்க்க விரும்புகிறது எனது ஆத்மா.]

"𑌦𑍍𑌰𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌮𑌿 𑌤𑍇𑌷𑌾𑌮𑌪𑌿 𑌚𑍇𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌂 𑌮𑌨𑍋𑌰𑌥𑍋 𑌮𑍇 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌤𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌃 ।
𑌪𑍂𑌰𑍍𑌣𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌪𑌰𑌸𑍍𑌯 𑌜𑌨𑍍𑌮 𑌨𑌿𑌵𑌾𑌰𑍍𑌯𑌤𑍇 𑌕𑍇𑌨 𑌮𑌨𑍋𑌰𑌥𑌸𑍍𑌯 ॥"

[அவர்களுடைய மக்களையும் பார்த்துவிட்டால் வேறு மநோரத மொன்று உண்டாகிவிடும்; அதுவும் நிறைவேறிவிட்டால் மற்றொன்று உண்டாகி விடுகிறது; மநோரதங்களை அடக்கவல்லவர் யார்?]

"𑌆𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌤𑍋 𑌨𑍈𑌵 𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌤𑌮𑌿𑌦𑌂 𑌮𑌯𑌾𑌦𑍍𑌯 ।
𑌮𑌨𑍋𑌰𑌥𑌾𑌸𑌕𑍍𑌤𑌿𑌪𑌰𑌸𑍍𑌯 𑌚𑌿𑌤𑍍𑌤𑌂 𑌨 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑍈 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌸𑌙𑍍𑌗𑌿 ॥"

[மரணாந்தம் மநோரதங்க ளொழிவதில்லை என்பது இப்பொழுது எனக்குத் தெரிந்தது. மநோரதங்களிற் பற்றுள்ளவனுடைய மனம் பரமார்த்தமான காரியங்களிற் பற்றுள்ளதாக ஆவதில்லை.]

"𑌨 𑌜𑌾𑌤𑍁 𑌕𑌾𑌮𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌭𑍋𑌗𑍇𑌨 𑌶𑌾𑌮𑍍𑌯𑌤𑌿 ।
𑌹𑌵𑌿𑌷𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑍇𑌵 𑌭𑍂𑌯 𑌏𑌵𑌾𑌭𑌿𑌵𑌰𑍍𑌧𑌤𑍇 ॥"

[சிற்றின்பத்தை அநுபவிப்பதனால் மநோரதம் முடிவடைவ தில்லை; நெய்யால் நெருப்பு வளர்வதுபோல மீண்டும் மநோரதம் வ்ருத்தியடைகிறது.]

நீரில் நண்பனா யிருந்த மீனின் சேர்க்கையால் எனது ஸமாதி சீக்ரம் நாசமடைந்து விட்டது. மீனின் சேர்க்கையால் விவாஹம் செய்துகொண்டேன். விவாஹம் செய்துகொண்டதனால் எனக்கு மேன்மேலும் ஆசை யுண்டாகிறது. சரீரியான ஒரு ப்ராணி உண்டாவதே துக்ககரமானது. எனக்கு நூற்றைம்பது மக்கள் இருக்கின்றனர். ராஜ கன்னிகைகளை மணம் செய்துகொண்டமையால், பல புத்ரர்களால் அத்துக்கம் மிகுந்துவிட்டது. பேரன்களும், பேரன்களின் பிள்ளைகளும் மணம் செய்துகொள்வதால், மிகுந்த துக்கம் இன்னும் உண்டாகப் போகிறது. மனைவி 'நான்' என்னும் அபிமாநத்துக்குக் காரணமாகிறாள். நீரில் வஸிக்கும் மீனால் என் தவம் கலைக்கப்பட்டது. மீனின் சேர்க்கையால் எனக்குப் பெண்டு பிள்ளைகளிடம் ஆசை யுண்டாயிற்று. அவ்

வாசையால் கெடுக்கப்பட்டேன். சேர்க்கை யின்றி யிருத்தல் முனிவர்களின் மோக்ஷத்திற்குக் காரணம். சேர்க்கையினால் பல தோஷங்கள் உண்டாகின்றன. யோக ஸித்தியுள்ளவனே ஸம்ஸர்க்க தோஷத்தால் கீழே தள்ளப்படுவதா யிருக்கும்போது, மற்றையோர் தள்ளப்படுவதற்குக் கேட்பானேன்? மனைவி யென்னும் முதலையினால் கவ்வப்பட்ட மதியையுடைய நான், துக்கமற்றவனாயும் தோஷ மற்றவனாயும் ஆகுமளவும், ஆத்மாவுக்கு ஹிதமான கார்யத்தில் முயல்வேன். உலகனைத்தையும் ஸ்ருஷ்டித்தவரும், மனவாக்கினுக்கு எட்டாதவரும், நுண்ணியவற்றுக் கெல்லாம் நுண்ணியவரும், பெரிதானவற்றுக் கெல்லாம் பெரிதானவரும், வெளுப்பானவரும், கறுப்பானவரும், ப்ரபுக்களுக்கு ப்ரபுவானவருமான ஸ்ரீ விஷ்ணு பகவானைத் தவத்தால் பூஜிக்கிறேன். அதிக பல முள்ளவரும், ஸர்வ ஸ்வரூபியும், வ்யக்தமும் அவ்யக்தமுமான ஶரீரத்தை யுடையவரும், தோஷ மற்றவரும், அநந்தருமாகிய ஸ்ரீ விஷ்ணுவினிடம் எனது மனம் மோக்ஷ நிமித்தம் எப்பொழுதும் இருக்கட்டும். ஆதலின் ஆதி குருவான ஸ்ரீ விஷ்ணுவையே ஶரண மடைகிறேன்'' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, ஸௌபரி முனிவர், தமது புத்ரர்கள் மாளிகைகள் முதலிய போக ஸாதநங்களை விட்டுவிட்டுத் தமது ஐம்பது மனைவிகளுடன் வனத்திற்குச் சென்றார். அவ்விடம் தினந்தோறும் வைகாநஸர்களின் க்ரியைகளை மேற்கொண்டு ஸகல பாபங்களையும் அறவே ஒழித்து, மநஶ்ஶாந்தி யடைந்து, பஞ்சாக்நி மத்தியி லிருந்து தவம் செய்து வந்தார். பின்பு ஸகல கர்மங்களையும் பகவதர்ப்பணமாகச் செய்து, சித்த சித்தி யடைந்து, திவ்ய ஜ்ஞாநத்தைப் பெற்று முனிவர் மோக்ஷ மடைந்தார்.

> "ஆஶாபாஶ: பரமம் து:கம் நிராஶா: பரமம் ஸுகம்'
>
> 'அற்றது பற்றெனில் உற்றது வீடு'
>
> 'வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
> யாண்டு மஃதொப்ப தில்.'

'செந்தமிழ்ச் செல்வம்'

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

மஹர்ஷி ஸ்ரீ. வாஸுதேவாசார்ய ஸ்வாமி

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்ய ஸ்வாமி, அட்வோகேட், திருப்பாதிரிப்புலியூர்.]

> ஸ தத்வஸாரோயமஶேஷ: ஸுதவாந விஜிதேந்த்ரிய: ।
> க்ருஷ்ணஶ்ரீ விஶுத்தாத்மா வ்யக்தசேஷமஹா நரஷி: ॥

அந்வர்த்தமான 'மஹர்ஷி' என்ற பட்டப் பெயர் வாய்ந்த ஸ்ரீ வாஸுதேவாசார்ய ஸ்வாமி விண்ணுல கேறியதால், மண்ணுலகோர் அனைவரும் ஶோகக் கடலில் மூழ்கித் தவிப்பது வியக்கத்தக்கதல்ல. இந்த ஸ்வாமியைப் போன்ற குணாதிகர்கள் ஸுதீர்க்காயுஸ்ஸுக்களாக எவ்வளவு காலம் எழுந்

தருளியிருந்தபோதிலும் அவர்களது வியோகத்தால் ஜகத்துக்கு உண்டாகும் உபகாரஶைதில்யத்தை உத்தேசித்து ஸர்வ ஜனங்களும் வருந்துவது ஸஹஜமே. 'தேஜஸாம் ஹி ந வய: ஸமீக்ஷ்யதே' என்று சில வ்யக்தி விஶேஷங்களுக்குப் பால்யத்திலே நிஸர்க்கஸித்தமான ஶக்த்யதிஶயத்தைக்குறித்து மஹாகவி கூறியதை, வார்த்தகத்திலும் ஸர்வோபகார க்ஷமர்களாக எழுந்தருளியிருக்கும் தேஜஸ்விகள் விஷயத்தில் அந்வயிப்பது அநுசிதமாகாது. 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' வின் சென்ற ஸஞ்சிகையில், இந்த ஸ்வாமிக்கு உபமாநமாக பீஷ்மாசார்யரை ஸ்ரீ. உ. வே. ஸுதர்ஶநாசார்ய ஸ்வாமி குறித்திருப்பது ஸர்வாத்மநா உபபந்நமே. ஶாஸ்த்ரோக்த நியமத்தை அநுஷ்டிக்கும் க்ருஹஸ்தனைக்குறித்து மநு பகவான், 'ப்ரஹ்மசார்யேவ பவதி யத்ர தத்ராஶ்ரமே வஸந்' என்று அருளிச் செய்திருப்பதால், ஶாஸ்த்ர மர்யாதையை எள்ளளவும் மீருத ஆஜாநசுத்தரான இந்த ஸ்வாமியை 'ப்ரஹ்மசாரி' யென்று வ்யவஹரிப்பது அநுசித மாகாது. ஆகையால் எல்லா அம்ஶங்களிலும், (அதாவது : ப்ரஹ்மசர்யம், ஜ்ஞாநம், வைராக்யம், கர்மயோக நிஷ்டை, தீர்க்காயுஸ், இஷ்டகால ஶரீர த்யாகம் முதலிய ஸர்வாகாரங்களிலும்) இவர் பீஷ்மருக்கு ஸமாந மென்பது மிகையா காது. இந்த ஸ்வாமியின் திருக்கல்யாண குணங்களையும் தத்நுரூபமாக இவர் செய்துள்ள பற்பல ஸத்கார்யங்களையும் யதாவத்தாக வர்ணிக்கப்புகுந்தால், ஒரு பெரிய க்ரந்தம் எழுதவேண்டிய தாகும். இங்கதற்கு அவகாஶ மில்லாதது பற்றி அத்யவச்யமாகத் தோற்றும் சிலவற்றைமட்டில் சுருங்கக் குறிக்கிறேன்.

நமது பூர்வீகமான வேத வேதாந்த வித்யையில் அபிருசியும், ப்ராவீண்ய மும், நமது வைதிக தர்மாசாரத்தில் நிஷ்டையும் ஏற்படுவதற்கு, ஆங்கில பாஷை யில் தேர்ச்சியும் அதில் வ்யவஹாரம் நடத்தும் மேல்நாட்டாருடைய ஸஹவாஸ மும் ப்ரபலமான ப்ரதிபந்தகங்க ளென்று பலர் நினைத்திருப்பது தவறென்பதற்கு இந்த ஸ்வாமியின் அநுபவமே போதுமான சான்ருகும். மேலும் நாம் நமது பூர்வீகமான வேத வித்யையை அப்யஸிப்பதாலும், வைதிக தர்மாசாரத்தை அநுஷ்டிப்பதாலும், இப்போதைக்குச் சிறிது காலம் முன் வரையில் நம் நாட்டை ஆண்டுவந்த ஆங்கிலேயர் நம்மிடம் வெறுப்புறுவதற்கும் அவர்கள் நம்மை அவமதிப்பதற்கும் ஹேதுவாகிற தென்றும், அவ்வித அவஜ்ஞை நமக்கு நேராம லிருப்பதற்காக நாம் நமது வித்யை ஆசாரம் இவைகளைக் கைவிட்டு மேல்நாட்டார் ஒழுக்கத்தையே பின்பற்றவேண்டு மென்றும், பலர் கொண் டிருந்த அபிப்ராயம் கேவலம் ப்ரமப்ரயுக்தமே தவிர உண்மையில் அதற்கு ஆதாரமில்லை யென்பதும், இந்த ஸ்வாமியிடம் அந்ய மதஸ்தர்களான ஆங்கிலே யர்கள் மந:பூர்வமாய் வைத்திருந்த அபிமாநத்தாலும் பஹுமாநத்தாலும் நம்பிக்கையாலும் ஸர்வ லோக ஸாக்ஷிகமாக ஸ்தாபிக்கப்பட்டது.

நமது வைதிக ஸித்தாந்தமும் ஸம்ப்ரதாயமும் நிரதிஶயமான மேன்மை வாய்ந்தன வாகையால், அவற்றிற்கு நாம் இட்டுப்பிறந்திருந்தும், பகவத் ஸங் கல்ப ஸித்தமான இந்த பாக்யத்தை நாம் உபயோகப்படுத்திக்கொள்ளாமல் தவறவிடுவதால் நாம் ஸ்வரூபஹாநியைத் தேடிக்கொள்வதாகுமே தவிர வேறில்லை யென்கிற நிர்ணயம் இந்த ஸ்வாமியின் மநஸ்ஸில் நிலைபெற்றிருந்ததே,

இவர் எந்த ஸந்தர்ப்பத்திலும் வைதிகாசாரத்தைக் கைவிடாது அதிச்ரத்தையுடன் அநுஷ்டித்து வந்ததற்குக் காரணம் என்பது நிஸ்ஸம்ஶயம். தமது அந்தராத்மாவுக்கு யுக்தமென்று தோன்ருத விஷயத்தில் இந்த ஸ்வாமிக்கு ப்ரவ்ருத்தி ஏற்படமாட்டாதென்கிற விஷயம், இவருடைய ஸத்ய ஸ்வபாவத்தையுணர்ந்தோர் அனைவரும் அறிவார்கள். இவருடைய ஸதஸத்விவேக கௌஶலமும் எல்லாருக்கும் தெரிந்ததே. ஆகையால் ஆங்கில பாஷையை அப்யஸித்தும், ஆங்கிலேயர்களின் ஸஹவாஸமிருந்தும், இவர் வைதிக தர்மாநுஷ்டாந பத்ததியிலிருந்து ரேகாமாத்ரங் கூடத் தவறவில்லையென்ருல், இதுவே அத்தர்ம மார்க்கத்தின் உயர்வுக்கு ஓர் உத்தமமான ப்ரமாணமாகக் குறையில்லை. ‘பீஷ்மாதிகளான ஜ்ஞாநாதிகர்களைக் கொண்டு மூதலிப்பித்தும்’ என்று நம் ஆசார்யன் ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன், சான்ருேருடைய நிர்ணயங்களைப் பகவானே தனது ஆஜ்ஞாநுஜ்ஞைகளின் யாதார்த்யத்தை த்ருடீகரிப்பதற்காக உதாஹரிப்பதாகக் கூறியிருப்பதால், சிறந்த ஜ்ஞாந ஶீலாநுஷ்டாநாதி ஸம்பந்நரான இந்த ஸ்வாமியின் அபிப்ராயமும் அநுஷ்டாநமும் மற்றெல்லா ஸஜ்ஜநங்களுக்கும் வழிகாட்டியாய் நிற்கின்றனவென்று கூறுதல் மிகையாகாது. நமக்கு ஸ்வரூப ஸித்தமான ஆசாராதிகளை நாம் கைவிடாது, ஸர்வ தேஶ தஶாகாலங்களிலும் ஏகரூபமாய் ச்ரத்தையுடன் அநுஷ்டித்துவந்தால், நம்முடைய ருஜு ஸ்வபாவமே வெளியாவதுபற்றிப் பிறர்க்கு நம்மிடத்தில் கௌரவ புத்தி யுண்டாகுமேதவிர அவஜ்ஞை பிறக்க ந்யாயமில்லை என்கிற தத்வம் இவரது சரித்ரத்தால் நன்கு விளங்குகிறது. இதற்கு மாருக நம் உருவை மாற்றிக்கொண்டு ம்லேச்சாசாரங்களைக் கொண்டு அவ்விதமாய் மேல் நாட்டாரின் ப்ரீதி பஹுமாநாதிகளுக்குப் பாத்ரமாகவேண்டுமென்று நினைத்து, அவ்வழியில் சென்ற பலர் அடைந்த பரிபவமும் க்லேஶமும் இந்த தத்வத்தை வ்யதிரேகமுகோ த்ருடீகரிக்கிறதென்பதும் நமக்கு அநுபவ ஸித்தமான விஷயம்.

ஆகையால் இந்த ஸ்வாமியின் சரித்ரத்திலிருந்து நம் ஆர்ய ஜனங்கள் முக்யமாகத் தெரிந்துகொள்ளவேண்டியதென்னவெனில்: ‘உதீஷ் வைதிகாநாஶ உநவஸாவி நஜூஜயெகு’ என்றபடி ஶாதாவி தரவஸஹஸ்ரெ ஹெஶ்ராஜவிவ தமூதரமான வேதஶாஸ்த்ரம் விதித்த வழியைப் பின்பற்றுவதே நமக்கு ஸர்வ ப்ரகாரமான ஐஹிகாமுஷ்மிக ச்ரேயஸ்ஸுக்களுக்கும் ஆஸ்பதமாகுமே தவிர, அதை அதிலங்கநம் செய்வதால் எல்லா விதத் தீங்குகளுமே விளையுமென்பதற்கு ஸந்தேஹமில்லை என்பதே. ராஜ்யம் ம்லேச்சர்களிடமிருந்தபோது இவ்வதிலங்கநத்துக்கு ஒரு வ்யாஜமிருந்ததாக வைத்துக்கொண்டபோதிலும், இப்போது அந்த வைஶஸம் நீங்கி ராஜ்ய நிர்வாஹம் நம் கையில் வந்தபிறகும் இந்த ஆசார வைபரீத்யம் பாயிதாநுவ்ருத்திபோல் அநுவர்த்திப்பது தத்வஜ்ஞர்களுக்கு மிகுந்த ஶோகத்தை விளைவிக்கிறது.

நம் ஶாஸ்த்ரம் ‘ஶாதாவி தரவஸஹஸ்ரெ ஹெஶ்ராஜவிவஸீஷதஶழ’ என்று முன்பு கூறியதின் உண்மை இந்த ஸ்வாமியின் அநுபவத்தாலே நமக்கு ப்ரத்யக்ஷமாகிறது. நமக்குப் பரோக்ஷமாயிருக்கும் ஆமுஷ்மிக பலங்கள் ஒருபுறமிருக்க,

ப்ரத்யக்ஷமான ஐஹிக பலங்களைக்கொண்டே நம் வைதிகாசாரத்தின் ஆநு கூல்யத்தை ஸாதிக்க முடியும். மநுஷ்யர்கள் முதன்மையாகக் கோருபவை ஶரீராரோக்யமும் தீர்க்காயுஸ்ஸும் என்பது நிராக்ஷேபம். இதை நமது ஆசார முறை ஸாதித்துத் தருகிற தென்பதற்கு இந்த ஸ்வாமியே முக்யமான நிதர்சந மாகிறார். ஶாஸ்த்ரோக்தமான ஆஹார நியமும் ஆசார முறையுமே இவர் ஸ்வஸ்த ஶரீரத்துடன் தீர்க்காயுஸ்ஸாக எழுந்தருளியிருந்ததற்குக் காரணம் என்பது இவருடன் பரிசய முள்ளவர் அனைவரும் உணர்ந்த விஷயம். மேலும் 'ஶமோ தமஸ்தப: ஶௌசம் க்ஷாந்திரார்ஜவம்' என்று குறிக்கப்பட்ட மானஸ தர்மங்களும் இவரிடம் ஸுப்ரதிஷ்டமாயிருந்தது காரணமாக இவருக்கு மநோநைர்மல்யமும் ஸத்வோத்தரதையும் ஸித்தமாயிருந்ததால் இவர் எப்போதும் கவலையின்றி ஸந்துஷ்டராகவே எழுந்தருளியிருந்தார். மேலும், 'ஆசார்யோபாஸநம்', 'மயி சாநந்யயோகேந பக்திரவ்யபிசாரிணீ' என்றபடி ஆசார்ய ஸேவையும் பகவத் பக்தியும் இவருக்கு நிறைந்திருந்தபடியால், ஆசார்யாநுக்ரஹத்தையும் பகவதநுக்ரஹத்தையும் இவர் பூர்ணமாகப் பெற்று ஸர்வ ப்ரகாரமான ச்ரேயஸ்ஸுகளையும் அடைந்தா ரென்பதும் நிஸ்ஸம்ஶயம். ஆகையால் இவருடைய திவ்ய சரிதம், லௌகிகர்களுக்கும் வைதிகர்களுக்கும் உத்க்ருஷ்டமான உதாஹரணமாய் விளங்குகிறது.

வஸ்துஸ்திதியைச் சற்றுப் பராமர்ஶித்தால் இவரது அநுஷ்டானமே சிறந்த தென்பது புலப்படும். 'ஶரீரமாத்யம் கலு தர்மஸாதநம்' என்றபடி நமக்குப் பகவான் ஶரீரத்தை அநுக்ரஹித்ததன் உத்தேஶம், அதைக் கருவியாகக் கொண்டு நாம் தர்மாநுஷ்டானம் செய்து உஜ்ஜீவிக்கவேண்டு மென்பதே. ஆகையால் இவ்வகையான பகவதுத்தேஶத்தை நாம் சரிவர நிறைவேற்றுவதற்காக ஶரீரம் ஸுரக்ஷிதமாயிருக்கவேண்டியது அவச்ய மாகையால், அதற்காகவே தர்ம ஶாஸ்த்ரங்கள் ஆசார நியமங்களை விதிக்கின்றன. இது விஷயத்தில் தர்ம சாஸ்த்ர விதிகளும் ஆயுர்வேத நியமங்களும் அநேகமாய் ஒத்திருக்கின்றன வென்பது கவனிக்கத்தக்கது. இதுபற்றியே 'தேஹரக்ஷணம் ஶாஸ்த்ரார்த்தாநுஷ்டாநாய ச' என்று விதிக்கப்பட்டிருக்கிறது. இதை வைத்தே பகவான் மநுவும்,

" ஆசாராத் லபதே ஹ்யாயுராசாராதீப்ஸிதா: ப்ரஜா: ।
ஆசாராத் தநமக்ஷய்யமாசாரோ ஹந்த்யலக்ஷணம் ॥ "

என்று அறுதியிட்டார்.

மற்றொரு மஹாகுணம் இந்த ஸ்வாமியினிடம் இயற்கையாய் அமைந்துள்ளது மிகப் போற்றத்தக்கதாகும். அதாவது: அர்த்த ஶௌசம். 'யோऽர்த்தே ஶுசி: ஸ ஹி ஶுசிர் ந ம்ருத்வாரிஶுசி: ஶுசி:' என்பது ஶாஸ்த்ர நிர்ணயம். ஆகையால் பணத்தில் எவன் பரிசுத்தனோ அவன்தான் சுத்தனெனப்படுவன். இந்த சுத்தியில்லாதவன் கேவலம் மண்ணையும் தண்ணீரையுங் கொண்டு தன்னை எவ்வளவு சுத்தம் செய்துகொண்டபோதிலும் அவன் சுத்தனாகான் என்பது இதன் பொருள். எல்லாவித சுத்திக்கும் மேற்பட்டதான இந்த மஹாசுத்தி

இந்த ஸ்வாமியினிடம் குடிகொண்டிருந்ததே, பற்பல தர்ம ஸ்தாநங்களில் இவரையே ப்ரதம நிர்வாஹகராக ஆங்கிலேயர்களும் நம்மவர்களும் ப்ரார்த்தநா பூர்வகமாய் அமைக்கும்படி நேர்ந்தது. இவ்வித ஸத்கார்யங்களின் பொறுப்பைப் பிறர் எவ்வளவு தம்பேரில் சுமத்தின போதிலும், வார்த்தக்யத்தால் ஏற்பட்ட ச்ரமத்தைக்கூடப் பாராட்டாமல், பரோபகாரம் முக்யமான பகவத் கைங்கர்ய மென்று நினைத்து யாவச்சக்தி அக்கார்யங்களை இவர் அதி ஜாகரூகராகக் கவனித்து வந்தது எல்லோரும் ஆச்சரியப்படவேண்டிய விஷயம். ‘கிம் து³ஷ்கரம் ந ஸாதூ⁴நாம்’ என்று ப்ரகரணாந்தரத்தில் கூறியதை இங்கு இந்த ஸ்வாமி விஷயத்தில் அந்வயித்துப் பேசுவது அநுசிதமாகாது. ‘ஸர்வ பரத்தையும் பகவானுடைய திருவடிகளில் ஸமர்ப்பித்து, ஸமஸ்த கார்யங்களையும் அவனது ஆஜ்ஞை யென்று த்ரிகரண சுத்தியுடன், த்ரிவித ஸாத்விக த்யாக புரஸ்ஸரமாய் நிர்வஹிப்பவருக்குத் தாங்கக்கூடாத சுமையென்ப தேது?’ என்கிற ஶாஸ்த்ரார்த்தம் இதனால் வெளியாகிறது. ‘யோக³: கர்மஸு கௌஶலம்’ என்றபடி, இந்தக் கர்மயோகி ஏற்றுக்கொண்ட கார்யங்க ளெல்லாம் செவ்வனே பரிபாலிக்கப்பட்டும் முடிக்கப்பட்டும் வந்தன வென்பது யாவரு மறிந்த விஷயம். ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ பத்ரிகையை இந்த ஸ்வாமி நடத்திவந்த சாதுர்ய மொன்றே இவருடைய அந்யாத்ருஶமான ஶக்திக்கு நிதர்ஶநமாகக் கூறத்தகும். வைதிகர்களும் லௌகிகர்களும் த்ருப்தி யடையும்படி இப் பத்ரிகை ஸர்வோத்க்ருஷ்டமான ரீதியில் நடைபெறும்படி இவர் செய்துவந்தது அத்யந்தம் ச்லாகார்ஹ மென்பது யுக்தமேயாகும்.

இன்னுமொரு உத்தம குணம் இங்கு ப்ரஸ்தாவார்ஹ மாகிறது. நம்மவர்களுக்குக் காலநியமத்தை (Punctuality) அநுஸரிக்கும் ஸாமர்த்யம் இல்லையென்று பாச்சாத்யர்கள் குறைகூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். அது அடியோடு நிராதார மென்று மறுக்கவும் முடியாது. ஆனால் இந்த ஸ்வாமி இவ்விதமான அபவாதத்தைப் போக்கி, ‘நாமும் கால நியமத்தைச் சிறிதும் தவறாமல் நடக்கும் சக்தியுள்ளவர்களே’ என்பதை நிரூபித்துக் காண்பித்தார். இவ்விஷயத்தில் இவருடைய ஶக்தி ஆங்கிலேயர்கூட ஆமோதிக்கும்படியிருந்தபடியால், நம் ஜனங்களுக்குள்ள மதிப்பு மிகவும் உயரப்பெற்றது. இதையும் நாமெல்லோரும் சிறந்த ஒருபகாரமாகவே கருதவேண்டும்.

ஸ்ரீ அழகியசிங்கர் ஸத்வித்யா ப்ரவசநத்துக்காகக் கைக்கொண்ட இரண்டு ப்ரக்ரியைகளும் (அதாவது : ஸ்ரீ மதுராந்தகம் வித்யாஶாலை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகை ஆகிய இவைகள்) இந்த ஸ்வாமியின் நிர்வாஹாதிக்ரியையைச் சார்ந்திருந்தன வென்பதும், அதனாலேயே அவைகள் மிகவும் த்ருப்திகரமாக நடந்தேறிவந்தன வென்பதும் எல்லோரு மறிந்த விஷயம். இந்த ஸ்வாமி மற்றெல்லோரையும்விட வயோதிகராயிருந்த போதிலும், ஸ்ரீ அழகிய சிங்கரிடமுள்ள நிரதிஶய ப்ரதிபத்தியாலும் ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹ பலத்தாலும் இந்தப் பெரிய கார்யங்களை நிறைவேற்றிவர ஸமர்த்தராயிருந்தார். இனி இவர் ஸ்தாநத்தில் தகுந்த அதிகாரி ஏற்பட வேண்டிய விஷயத்தில் ஸ்ரீ அழகியசிங்கருடைய தபோபலமும் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய க்ருபையும்தான் ப்ரமாணம்.

189264

இந்த மஹானுடைய பரிசயம் அடியேனுக்கு ஏற்பட்டு இப்போது சற்றேறக்குறைய நாற்பது ஸம்வத்ஸர மிருக்கும். இவ்வளவு காலத்திலும் அடியேனிடத்தில் இந்த ஸ்வாமியின் க்ருபை ஏகரூபமாகவே ப்ரஸரித்திருந்தது அடியேனுடைய பாக்யவிசேஷ மென்றே கருதுகிறேன். ஆகையால், இப்போது இந்த ஸ்வாமியின் வியோகத்தால் அடியேனுக்கு ஏற்பட்டுள்ள துக்கம் அளவிறந்த தென்பதை விஜ்ஞாபித்துக்கொள்வது இங்கு ப்ராப்தாவஸர மென்று நினைக்கிறேன்.

ஸ்ரீராமமாதாவான கௌஸல்யாதேவியைக் குறித்தும், தார்மிகாக்ரேஸரரான யுதிஷ்டிரரைக்குறித்தும் இதிஹாஸங்களில் புகழ்ந்து பேசியிருப்பதுபோல், இந்த ஸ்வாயின் அவலம்பத்தால் வ்ருத்தியும் வ்ருத்தியும்பெற்ற பல வித்யார்த்திகளும் வித்வான்களும், இவர் மறைந்ததால், கொள்கொம்பு பிடுங்கப்பட்ட கொடிபோல் ஆதரவற்றிருப்பது மிகவும் ஶோகத்தை விளைவிக்கிறது.

[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விரோதி ஸ்ரீ ஐப்பசி (துலா) மீ அக்டோபர் – நவம்பர் – 1949

17—10—49	1உ	திங்கட்கிழமை	...	துலா க்ருஷ்ண ஏகாதசி திதி; துலா ரவி 5-27 ; விஷு புண்ய காலம்
18—10—49	2உ	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி (வ்ரதம்) த்வாதசி திதி
20—10—49	4உ	வியாழக்கிழமை	...	ராத்ரி நரக சதுர்த்தசி ஸ்நாநம்
21—10—49	5உ	வெள்ளிக்கிழமை	...	தீபாவளிப் பண்டிகை; ஸர்வ அமாவாஸ்யை
26—10—49	10உ	புதன்கிழமை	...	ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருநக்ஷத்ரம்
29—10—49	13உ	சனிக்கிழமை	...	ஸ்ரீ பொய்கையாழ்வார் ஸ்ரீ பிள்ளை லோகாசார்யர் திருநக்ஷத்ரங்கள்
30—10—49	14உ	ஞாயிற்றுக்கிழமை	...	ஸ்ரீ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்
31—10—49	15உ	திங்கட்கிழமை	...	ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்ரம்
1—11—49	16உ	செவ்வாய்க்கிழமை	...	ஸர்வ ஏகாதசி
5—11—49	20உ	சனிக்கிழமை	...	பௌர்ணமி திதி
15—11—49	30உ	செவ்வாய்க்கிழமை	...	துலா க்ருஷ்ண தசமி திதி; வ்ருச்சிக ரவி 59-34; [மறு நாள் ஸங்க்ரமண தர்ப்பணம்]

[illegible]

[illegible]

[illegible]

ஸ்ரீ ஆசார்யாப்யுதயம்

[ஸ்ரீ. உப. வித்வான் தூப்புல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ப்ரஹ்ம தேசம்]

[8-ம் ஸஞ்சிகை, பக்கம் 238-ன் தொடர்ச்சி]

---

73 [illegible]
[illegible]

74 [illegible]
[illegible]

75 [illegible]
[illegible]

76 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

77 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible]

---

1 [illegible]
[illegible]

2 [illegible]
[illegible]

3 [illegible]
[illegible]

4 ஹ்ராத்வீ விஶாலே ஸுஹ்ருதே தா தஸ்யா: ஜவஸாதோ யோமிவா
ஸாவாணாஸ்யா: ।
யுதோயூர்வாணா: கரதமிதுகரது ஸம்ஹோஷிதாம் ஸம்பவதிம்
பூதஸ்யே ॥

5 பூர்ஸாய யோமீ பூவிஶாஹுஸாயஸ்யாம் வஸ்தை யர்தாம் ஸவ்ஹி
ஸ்ரி தாம்ஸை: ।
நிஸஹஸே ஸேர்ஹவஸே ஸ்நாயாம் ஊநோஹஸாம் ஸம்பவாஸீம் ஊஊஶர் ॥

6 கயீதநா நாமஊவாந்தவகா: விஶேஷஶாஸ்ராயர்வி ஆஸஊக்ஷா: ।
ஸ்ரநாஊய நாஷா ந விஸாஜிதாம்மா: விஸ்ராவிஸாஜஸி ஹிஸம்பவாயர்ழ ॥

7 விஶம்மஊளம்ஜ்யாவர தஊயஸ்ஹாமா: வஶாஶஊஜ்ஞாம்ஶிதவாணிவஊ: ।
கூஷாஜி நாஜும்கூ தவக்ஷவ ஸ்ரு வஷ்டி வெஊாஷுவடுவொ ஹியத்ரு ॥

8 ஶ்ரம்மாணிஶேஶோ ஸிவ ஶோந்தாநி ஸஊ்யாணி ஸந்ராம்ஶிதவஷ்யஹாம்ஜி ।
விஶாஜுஊ ஸேர்ஊகவாடுயக்தா நூஸாஷி ஸேஹாநி அ யத்ரு வாயர்ழ ॥

9 கம்ஸோஜவாள மூஹிகஸேகேஸவாஸேஷு: அகோஸ அகூாஹயஸாஸஶோ ஸ்ரு ।
நிஸஜ்ஜா நிஊர்ஜுதோயஊணர் வாவெஸ்யா நாஸேஹம் விஜுஷஞ்சி
யஸ்யாழ ॥

10 தபிவ்ஹா ஸ்ஜஜு அாஸஸேந்த்ரா ஸ்வாஷக்ஷஊயஸ்யா: ஸாடுவி ஊா
ஜோஷ்ட்ரு: ।
உஸோஜதியர்ஊதஸஸோஜகோஶா ஜுஷஞ்சி யஸ்யாம் ஜுஜு நா ஸாஶீஜா: ॥

11 ஶ்ரஹேஷா யஸ்யாம் வாஸி வம்ஜஸஸ்ரா ஶ்ரூகா ஶ்ரூஹாம்
மாநிதஶாஸிகா ஸ்ரு ।
ஸம்ஸேதிஸம்ஸேதி வஅம்ஹி நிதும் வஊஜ்ஜு வஸ்ராநி ஊநோஹஸாணி ॥

12 உஷஸ்ஸா காஜுஷா அ யத்ரு வாயர்ம் பூஶோயஊநா:
வாஸாஷாஸ்ரிய ஸ்ரு ।
ஹத்ரம்வி ஸேணாஷு யிதா ஸ்ஸவஷ்டி மாயா: வஷ்டு: வஸஊம் வாஊம்ஸழ ॥

13 நாயோ ஊநியர்ஊ நஹாஷ்யகாஸவெஊாவதம் ஸாயர்மாஸ பூஊவஸ்யா: ।
கநேூ அ ஸவெர் மாஸவெ நிவாஸம் யஷீ நகாவர் நயிதவுஹாவா: ॥

14 யஸ்யாம் நமயர்ம் வாஸாஷ: வாஶாணோ விஷ்ரதூ ஸேவகாண
வயோயிவாஸழ ।
ஸவா ஷ்விஊஜ்ஞ நாஜாவநாய ஶேஷத விஶாஷ்ய ஹாஜஸேந்தஸ்வு ॥

15 கவேஸகந்யாஊத்வவித்ரு தோயா ஊஜா ஸஊஜ்யா ஊவ யந்மயர்: ।
வாஶ்ரூர்ஷ்வயெவி பூவஹதுஊ ஶ்ரு ஸஶோஜவாளமூஹிகஸேகேஸவாஸ்யா ॥

16 [illegible] ।
[illegible] ॥

17 [illegible] ।
[illegible] ॥

18 [illegible] ।
[illegible] ॥

19 [illegible] ।
[illegible] ॥

20 [illegible] ।
[illegible] ॥

21 [illegible] ।
[illegible] ॥

22 [illegible] ।
[illegible] ॥

23 [illegible] ।
[illegible] ॥

24 [illegible] ।
[illegible] ॥

25 [illegible] ।
[illegible] ॥

26 [illegible] ।
[illegible] ॥

27 [illegible] ।
[illegible] ॥

28 [illegible] ।
[illegible] ॥

29 [illegible]

30 [illegible]

31 [illegible]

32 [illegible]

33 [illegible]

34 [illegible]

35 [illegible]

36 [illegible]

37 [illegible]

38 [illegible]

39 [illegible]

40 [illegible]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபா, டில்லி.

ஸ்ரீமத் வேதமார்க ப்ரதிஷ்டாபநாசார்யோபயவேதாந்தாசார்யராய் ஜ்ஞான வைராக்யாநுஷ்டான ஸேவதியாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதஹோபிலமடாஸ்தான வித்வான் தேசிக தர்சன விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி கங்காஸ்னானார்த்தமாய் டில்லிக்கு எழுந்தருளினார். டில்லி ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையார் ஷை ஸ்வாமியை ஸபையில் பல உபந்யாஸங்களைச் செய்தருளும்படி ஸ்ரீ. உப. கோமடம் ஸ்ரீநிவாஸய்யங்கார் மூலமாகப் பலதடவை ப்ரார்த்தித்திருந்ததை யனுஸரித்து நேரில் கண்டு அஸ்மத்ஸம்பிரதாய விஷயமாக அனேக உபந்யாஸங்களை இப்பொழுது செய்தருளும்படி ப்ரார்த்தித்ததின்பேரில் அதற்கிணங்கி ஷை ஸ்வாமியும் 22-நாட்கள் இவ்விடம் எழுந்தருளியிருந்து, டில்லி, ரீடிங் ரோட், தென்னிந்தியக் கழகக் கட்டிடத்தில் அனேக தர்மசாஸ்திர விஷயங்களைப்பற்றியும், விசிஷ்டாத்வைத ஸம்பிரதாயரீத்யா தத்வ ஹித புருஷார்த்தங்களைப் பற்றியும் பாண்டவர்க்குத் தேர்ப்பாகனாக நின்ற ஆயர்தம் கொழுந்தாகிய கீதோபநிஷதாசார்யன் அர்ஜுனனை வியாஜமாக வைத்துக்கொண்டு ஸர்வலோக ஸம்ரக்ஷணார்த்தமாக உபதேசித்த ஸ்ரீபகவத்கீதாசாஸ்திரத்தின் ஸாரதமார்த்தங்களைப்பற்றியும், பரக்கும் புகழ்வரும் பைம்பொருள் வாய்த்திடும் பக்தர்களாய் இரக்கின்றவர்க்கிவை ஈந்தால் அறமுளதென்றியம்பாமல், கரக்கும் கருத்துடைத் தேசிகராய் எழுந்தருளியிருந்து மிகவும் தெளிவாயும் அநதிவிஸ்தாரஸங்கோசமாயும் கம்பீரமான திருக்குரலில், உபந்யாஸங்களைக் கேழ்க்கத் திரள் திரளாக வந்திருந்தவர்களுடைய செவிக்கு இன்னமுதம் பொழிவது போல, உபந்யாஸங்களைச் செய்தருளினார். அப்படிச் செய்த உபந்யாஸ விஷயங்களாவன :—

1. ராமாநுஜ தயாபாத்ரத் தனியன் விசாரம்.
2. ஸ்ரீமத் பகவத்கீதா மாஹாத்ம்யம்.
3. சாஸ்திர வச்யதை.
4. அர்ஜுன விஷாத யோகம்.
5. ஆத்ம ஸ்வரூப விவேகம்.
6. அவதார ரஹஸ்யம்.
7. கர்ம யோகம்.
8. ஜ்ஞான யோகம்.
9. பக்தி யோகம்.
10. ஸத்வாதி குணகர்ம விபாகம்.
11. ஸ்ரீகீதா ஸாரம்.
12. ஸ்ரீராமாவதார மஹிமை.
13. ஸ்ரீஸீதா கல்யாணாதி சாஸ்த்ரீய விவாஹாதி தர்மங்கள்.
14. தத்வ ஹித புருஷார்த்தங்கள்.
15. தர்மம்.
16. ஸுகம்.
17. விசிஷ்டாத்வைத மத மஹிமை, இவை முதலியன.

இந்த உபந்யாஸங்களை எல்லோரும் கேட்டு, மிகவும் ஸந்தோஷித்ததோடு ஷை ஸபையார் அடியில் கண்ட மாதிரி பிரசம்ஸா பத்திரிகையை ஸபா கார்யதர்சி ஸ்ரீ. உப. அனந்தாசாரியர் மூலமாக வாசித்து ஸ்வாமிக்கு ஸமர்ப்பித்தார்கள். பிறகு ஸபையார் ஸ்வாமிக்கு யதோசிதமாக ஸம்பாவனையும் செய்தார்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌸𑌭𑌾, 𑌡𑍇𑌹𑌲𑍀

𑌕𑍍𑌷𑍀𑌰𑍋𑌦𑌧𑌿𑌂 𑌯𑌃 𑌕𑌰𑍁𑌣𑍈𑌕𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌃 𑌸𑌦𑍍𑌮 𑌕𑍍𑌷𑍀𑌰𑍋𑌦𑌪𑍁𑌤𑍍𑌰𑍀𑌂 𑌗𑍃𑌹𑌿𑌣𑍀𑌂 𑌕𑌰𑍋𑌤𑌿 ।
𑌕𑍍𑌷𑍀𑌰𑍋𑌦𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌂 𑌜𑌯𑌤𑌿 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌸𑌾 𑌕𑍍𑌷𑍀𑌰𑍋𑌦𑌰𑌙𑍍𑌗𑍇𑌨 [illegible] ॥

𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍁 𑌤𑌤𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌶𑌿𑌕𑌦𑌰𑍍𑌶𑌨 𑌵𑌿𑌜𑌯𑌧𑍍𑌵𑌜 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 [illegible] 𑌬𑌿𑌰𑍁𑌦𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑌹𑍋𑌬𑌿𑌲𑌮𑌠𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌂𑌸𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌾𑌷𑍍𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑍁𑌤𑍍𑌤𑌙𑍍𑌕𑍋𑌟𑍍𑌟𑌕𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌃 !

𑌸𑌾𑌦𑌰𑌂 𑌨𑌿𑌵𑍇𑌦𑌯𑌾𑌮𑍋 𑌵𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌶𑌾𑌰𑌦𑍈𑌃 [illegible] 𑌪𑌾𑌰𑌙𑍍𑌗𑌤𑍈𑌃 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍋𑌪𑍇𑌤𑍈𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌿𑌃 [illegible] ।

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤 𑌭𑌾𑌗𑌵𑌤 𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾 𑌰𑌹𑌸𑍍𑌯𑌤𑍍𑌰𑌯𑌾𑌦𑌿 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍇𑌷𑍁 [illegible] 𑌭𑌵𑌤𑌾𑌂 𑌸𑌕𑌾𑌶𑌾𑌤𑍍 [illegible] 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌸𑍍𑌮𑌃 ॥ [illegible] 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣 [illegible] 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵 [illegible] ॥

𑌏𑌤𑌾𑌦𑍃𑌶 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑍇𑌣 𑌅𑌤𑍍𑌰 𑌪𑍁𑌨𑌃𑌪𑍁𑌨𑌰𑌾𑌗𑌤𑍍𑌯 [illegible] 𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌸𑌭𑌾 [illegible] 𑌉𑌭𑌯𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 [illegible] 𑌭𑌗𑌵𑌾𑌨𑍍 𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌃 𑌪𑍍𑌰𑍀𑌯𑌤𑌾𑌮𑍍 ।

𑌇𑌤𑌿

𑌶𑍍𑌰𑍀𑌵𑍈𑌷𑍍𑌣𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤 𑌸𑌭𑌾.

இப்படிக்கு,

ஸ. ம. கிருஷ்ணமாசாரியர்.

𑌡𑍇𑌹𑌲𑍀,
16—9—49.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

யோऽநந்த: ப்ருதிவீம் ததாதி ஶிரஸா ப்ருத்வீம்

ஸஞ்ஜீவயத்யவிருப்ஸக்தியா: ஸ்வயம் ।

சந்த்ராம்ஶு ஸஹஸ்ரகிரணச்ரவணசுபாதீர்த

ப்ராணாயாமோ ஸமவதே பரம்புருஷாய தஸ்மை ॥

ஸம்பாதகரின் குறிப்புகள்

சென்ற செப்டம்பர் ஸ்ரீ 19உ முதல் ரூபாயின் டாலர் மதிப்பை 30½ சத விகிதம் நமது சர்க்கார் குறைத்திருக்கிறார்கள். இதன் பலனாக உலகில் 'டாலர்' என்ற நாணயம் வழங்கிவரும் தேசங்களில் நம் தேசத்தின் சாமான்களை குறைந்த விலைக்கு விற்கவும் அந்த தேசங்களின் சாமான்களை அதிக விலை கொடுத்து வாங்கவும் நேரும். பிரிடிஷ் கவர்மெண்டார் தங்கள் தேசத்தின் நாணயத்தின் டாலர் மதிப்பைக் குறைக்கத் தீர்மானித்ததால் அந்த தேசத்தின் நாணயச் செலாவணியுடன் நெருங்கிய தொடர்பையுடைய நம் நாணயத்தின் டாலர் மதிப்பையும் குறைக்க நேர்ந்ததென்றும் இம்மாதிரி செய்யாவிட்டால் வியாபாரத்துறையில் பல கஷ்டங்கள் நேரிடக் கூடுமென்றும் பல பொருளாதார நிபுணர்கள் அபிப்ராயப்படுகின்றனர். நமது பக்கத்து தேசமாகிய பாகிஸ்தான் இன்னும் அம்மாதிரி தன் நாணயத்தின் டாலர் மதிப்பைக் குறைத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் இவ்விரு தேசங்களினிடையே நடைபெறும் வியாபாரத்தில் மாறுதலேற்படலாமென்று பலர் எண்ணுகின்றனர். இன்னும் அநேக விஷயங்களில் போல இந்த விஷயத்திலும் பாகிஸ்தான் இந்தியாவுடன் மாறுபட்ட அபிப்ராயம் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்விரு தேசங்களுக்கும் இன்னும் மனவொற்றுமை ஏற்படாதது ப்ரஜைகளின் பாக்கியக் குறைவென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. ரூபாயின் மதிப்பில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக உள்நாட்டு வியாபாரம் பாதிக்கப்படாமலிருக்கவும் பொருள்களின் விலைவாசிகள் ஏறாமலிருக்கவும் வேண்டிய நடவடிக்கைகளை சர்க்கார் கண்டிப்பாய் எடுத்துக்கொள்வர் என்று பிரதம மந்திரி நேரு உறுதிகூறியிருக்கிறார். ஏற்கனவே விலைவாசிகளின் உயர்வால் பலவித துன்பங்களுக்குள்ளாகியிருக்கும் நம் ஜனங்களின் கஷ்ட நிலைமையை நன்குணர்ந்து

ரூபாயின் மதிப்பு

லோக க்ஷேமத்தையே பிரதானமாகக் கருதி வியாபாரிகள் தக்கபடி நடந்து கொண்டு தேசம் பூர்ண ஸுபிக்ஷத்தையடையும்படி சரண்யன் ஸங்கல்பிக்க வேணும்.

* * * * * *

ஹிந்துமத தர்ம ஸ்தாபன சட்ட திருத்தமசோதா.

சென்னை சர்க்கார் கொண்டுவந்த ஹிந்துமத தர்மஸ்தாபன சட்ட திருத்த மசோதாவைப்பற்றி பரிசீலிக்க சட்ட சபையால் ஒரு ஸெலெக்ட் கமிட்டி நியமிக்கப்பட்டது, அக்கமிட்டியின் முன்பு பல பிரமுகர்களும் தர்ம ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் ஆஜராகி சாக்ஷியம் கொடுத்தனர். அவர்களில் பெரும் பாலோர் அம்மசோதா சட்டமாவது விரும்பத்தக்கதில்லை யென்பதைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டியதாகத்தெரிகிறது. அதை யனுஸரித்தே கமிட்டியின் முடிவும் இருக்குமென்று எதிர்பார்த்தோம். ஆனால் இப்பொழுது அந்தக்கமிட்டி புதிய மசோதாவைக் கைவிடுவதில்லையென்றும் மடங்களுக்கும் அம்மசோதாவிலிருந்து விலக்களிப்பதில்லை யென்றும் முடிவு செய்திருப்பதாக அறிகிறோம். இது மிக்க ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் கொடுக்கக் கூடியதாயிருக்கிறது. பிரகிருத மசோதா மூலம் கொண்டுவரப்படவிருக்கும் "சீர்திருத்தங்களி"ல் பல அம்சங்கள் தற்போது அமுலில் இருக்கும் சட்டதிட்டங்களினாலேயே சித்திக்கக் கூடியவை. ஹிந்துமத தர்மஸ்தாபனங்களின் லௌகிக கார்ய நிர்வாஹத்தில் உண்மையில் ஏதாவது குறைகளிருந்தால் அவைகளை நீக்கி சரிவர நடந்துவரும்படி செய்ய இப்போதுள்ள சட்டங்களின்படியே சர்க்காருக்கும் என்டௌமெண்ட் போர்டாருக்கும் போதிய அதிகாரம் இருந்துவருகிறது. ஒரு மத ஸ்தாபனம் எந்த காரியத்திற்காக ஏற்படுத்தப்பட்டதோ அதற்கு அதை ஏற்படுத்தியவர்களும் பின்புள்ளாரும் நடத்திவந்த முறைப்படி நடந்து வரும்படி செய்யவும், அந்த காரியத்திற்கல்லாமல் மற்ற காரியங்களுக்கு அந்த தர்மஸ்தாபனத்தின் சொத்துக்களோ வரும்படிகளோ துர்விநியோகம் செய்யப்படுவதைத் தடுக்கவும் அந்த மத தர்மஸ்தாபத்தைச் சார்ந்த ஒவ்வொருவருக்கும் தற்போது உரிமை யிருந்துவருகிறது. அப்படி யிருக்க இந்தப்புதிய மசோதாவுக்கு எவ்வித அவசியமுமில்லை யென்று பல அரசியல் வாதிகளும் பிரபல சட்ட நிபுணர்களும் அபிப்பிராயப் படுகின்றனர். ஹிந்துமத தர்ம ஸ்தாபனங்களின் வைதிக கார்யங்கள் விஷயத்தில் சர்க்காரோ என்டௌமெண்ட் போர்டாரோ குறுக்கிட்டு, அந்தந்த ஸ்தாபனங்களைச் சார்ந்தவர்கள் பயபக்தியுடனும் சிரத்தையுடனும் பின்பற்றிவரும் அனாதியான ஸம்பிரதாயங்கள், பழக்கவழக்கங்கள், ஆசாரானுஷ்டானங்கள், இவைகளை ஒங்கவொட்டாமல் செய்து தங்களுக்கு யுக்தமென்று தான்தோன்றியாய்த்

தோன்றும் கொள்கைகளை அவர்கள்மீது திணிக்க இப்புதிய மசோதா தாராள மாக இடமளிக்கிறது. வரப்போகும் அரசியலின்படி சர்க்கார் மதப்பற்றற்ற சர்க்காராக நடக்கும் என்று கூறப்படுகிறது. அப்படியாயின் மத தர்ம ஸ்தாபனங்களின் பரிபாலன விஷயத்தில் சர்க்காருக்கும் அவர்கள் சிருஷ்டிக்கும் போர்டாருக்கும் வரையற்ற அதிகாரங்களைக் கொடுக்கும் இம்மசோதாவைச் சட்டமாக்க முயலுவது மிகவும் அனுசிதம். மேலும், மத தர்ம ஸ்தாபனங்களின் பரிபாலனத்தை மத்திய சர்க்காரின் அதிகாரவரம்புக்குள் சேர்க்க வேணுமென்றும் மாகாண சர்க்காரின் நிர்வாஹத்தில் இருக்கக்கூடாதென்றும் அரசியல் நிர்ணய சபையில் கிளர்ச்சி நடந்துவருவதாகத் தெரிகிறது. இந்த நிலைமையில் பிரஸ்துத மசோதாவை அவசரப்பட்டுக் கொண்டு சட்டமாக்குவது விரும்பத்தகுந்ததில்லை. மடங்கள் விஷயத்தில் இம்மசோதா மூலம் சர்க்காருக்கும் போர்டாருக்கும் கொடுக்கப்பட விருக்கும் அதிகாரம் துஷ்பிரயுக்தமாகி அதனால் பலவிதமான இன்னல்கள் நேருமோ என்று ஸாதுக்கள் அஞ்சுகின்றனர். தேவஸ்தானங்களில் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர், புதிதாய் ஏற்பட்ட டிபார்ட்மெண்ட் போர்டாரின் அதிகாரத்தை ஏற்படுத்தியதால் இதுவரையில் அவைகளின் பொருளாதார நிலைமையிலோ அல்லது வைதிக கார்யங்களிலோ யாதொரு முக்கிய அபிவிருத்தியையும் கண்டிலோம். பல கோயில்களில் இடிந்துபோன இடங்கள் பழுது பார்க்கப் படாமல் அப்படியே இருக்கின்றன; விமானங்களிலும் மதில்களிலும் மண்டபங்களிலும் முளைத்துச் சேதமுண்டாக்கிவரும் செடிகொடிகளை அப்புறப்படுத்த முயற்சிப்பாரைக்கூட காணோம். பெரும்பாலும் தேவாலயங்களின் நிர்வாஹம் அவைகளில் சிரத்தையும் பக்தியும் இல்லாதவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, அவசிய சிலவுகள் குறைந்து அனாவசிய சிலவுகள் பன்மடங்கு அதிகமாகி, அந்தந்தக் காரியங்களை பக்தியுடனும் ப்ரீதியுடனும் கைங்கரிய புத்தியோடும் செய்து வந்தவர்கள் மறைந்து, தேவாலயங்கள் உத்தியோக சாலைகளாக மாறி, அவைகள் ஏற்பட்டதின் நோக்கம் நிறைவேறாமலே போய்க் கொண்டிருப்பதைத்தான் பார்த்து வருகிறோம். இந்த ஸ்திதி நம் மடங்களுக்கும் வந்து விடும்படி விடக்கூடாது.

இம்மசோதா மறுபடியும் சட்டசபை முன்பும் கவுன்ஸிலின் முன்பும் சீக்கிரத்தில் விவாதத்திற்குவரும். அப்பொழுது வைதிக மார்க்கத்தில் ஹார்த்தமான சிரத்தையுள்ள அங்கத்தினர்கள் தங்கள் முழு எதிர்ப்பைத் தெரிவித்து இம் மசோதா சட்டமாகாமலிருப்பதற்கு வேண்டியதைச் செய்ய வேண்டுமென வேண்டுகிறோம்.

* * * * * *

நமது சந்தாதாரர்கள் இந்தப் பத்திரிகை லாபத்திற்காகவோ பகட்டுக் காகவோ நடத்தப் படவில்லை யென்பதையும், நம் ஸித்தாந்தத்தின் விசேஷங்களை வெளியிடவும் ஆஸ்திக்யத்தையும் ஸதாசாரத்தையும் வளர்க்கவுமே ஸ்ரீ அழகிய சிங்கரால் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதென்பதையும் நன்குணர்ந்தவர்கள். அவர்கள் இதைப் பொழுது போக்குக்காகவோ நகைச்சுவைக்காகவோ விரும்பிப் படிப் பவர்களுமல்ல. இதன் சந்தாவும் மிகவும் குறைத்தே பத்திரிகை நடைபெற வேண் டிய அளவுக்கு அவசியமான அளவிலேயே வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி யிருக்க, பலர் செலுத்தவேண்டிய சந்தாத் தொகையில் ரொம்பவும் பாக்கி யிருப்பது அவர்களுக்குத் தாங்கள் கொடுக்க வேண்டிய பாக்கி தெரியாமல் இருப்பதால்தான் என்று கருதுகிறோம். ஆகவே அடுத்த ஸஞ்சிகையில் பாக்கிதாரர்களுடைய பெயரையும் பாக்கியையும் பிரசுரிக்க உத்தேசித்துள்ளோம். தனித்தனியே அவர் களுக்குத் தெரிவிப்பதில் அனாவசியமான தபால் செலவு ஆகிறது. அவர்கள் அதைப் பார்த்ததும் உடனே அந்த பாக்கிகளை அனுப்ப வேண்டுகிறோம். சந்தாத் தொகையை முன்பணமாக அனுப்ப வேண்டு மென்ற நியமத்தை 1950-வது வருஷம் முதல் இன்னும் உறுதியுடன் கடைப்பிடிக்கவேணு மென்று உத்தேசம். சந்தாவை அனுப்புவதில் சிரத்தையுள்ள மஹநீயர்களுக்கு முன்னதாக அனுப்பு வதில் ஒருவித சிரமமும் அனுத்ஸாஹமும் வெறுப்பும் இருக்காது. அப்படி அனுப்பிக் கொடுத்து அவர்கள் பத்திரிகையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியவர் களாவார்களென்று நம்புகிறோம்.

ஸ்ரீ:

செய்தி

தில்லைஸ்தாநம் ஸ்ரீ ஆதிவண் சடகோப மஹாதேசிகன் உத்ஸவம்.

இவ்வர்ஷம் ஷை மஹோத்ஸவம் நிகழும் விரோதிவரு புரட்டாசிமீ 3வ [19-9-49] இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் உபய வேதபாராயணவிதமாய் ஸேவை ஆரம்பித்து ப்ரதிதிநம் நடந்து, 12வ [28-9-49] திருக்கேட்டையில் சாத்துமறையும் நடந்தது. சாத்துமறையன்று காலை ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திவ்யாலங்க்ருதாய் திவ்ய ப்ரபந்தாநுஸந்தாநத்துடன் திருவீதி வலம் செய்தருளி, அலர்மேல்மங்கா ஸஹிதனை ஸ்ரீ ஸ்ரீநிவாஸப் பெருமாளை மங்களாஶாஸநம் செய்து அருளிப்பாடுகளுடன் திருமாலை திருப்பரியட்டம் முதலியவைகள் ஸமர்ப்பிக்கப்பட்டு, பின் ஸ்ரீ மடத்தில் ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹனையும் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் முதலான எம்பெருமான்களையும் மங்களாஶாஸநம் செய்தாகி, விசேஷமான சாத்துமறையும் ஸம்பாவனைகளும் கண்டருளினர். தீர்த்தம் சடாரி ஆகியபின், சதுர்வித சித்ராந்ந விநியோகங்களுடன் கோஷ்டி இனிது முடிந்தது. அன்றிரவு பெரும்புலியூர் ஸ்ரீ ஸுந்தரராஜ பெருமாள் ஸந்நதியிலும் வழக்கம்போல் ஸேவை ஸம்பாவனை முதலியவைகளுடன் சாத்துமறை நடந்தேறியது.

T. S. சேஷாத்ரி தாஸன்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா—21-8-49 முதல் 30-9-49 முடிய சந்தா வரவு

நெ.	சந்தா நெ.	பெயரும் விலாசமும்.	தொகை. ரூ.
1.	3.	ஸ்ரீ. M. ஸ்ரீனிவாஸாச்சாரியார், மைலாப்பூர், 49	3
2.	13.	,, S. சாரங்கபாணி ஐயங்கார், மதுங்கா, 49	3
3.	124.	,, C. S. ஸுந்தராச்சாரியர், மதுங்கா, 49	3
4.	265.	,, S. ராமஸ்வாமி ஐயங்கார், பல்லாவரம், 49	3
5.	515.	,, V. S. ஸ்ரீனிவாஸ ஐயங்கார், திருச்சி, 47	3
6.	539.	,, S. ஸம்பத்நாராயணன், திருவல்லிக்கேணி 50	3
7.	598.	,, S. R. S. ராகவன், மதுங்கா, 47, 48, 49	9
8.	632.	,, K. ராஜகோபால ஐயங்கார், சோளவல்லி 48	3
9.	697.	,, N. A. சிங்காரம்மாள், சைதாப்பேட்டை, 48	3
10.	700.	,, K. V. கிருஷ்ணமாச்சாரியார், திருவல்லிக்கேணி, 47, 48	6
11.	708.	,, N. பார்த்தசாரதி, M.A., L.T., மைலாப்பூர், 48	3
12.	738.	,, P. R. ரங்கஸ்வாமி ஐயங்கார், வக்கீல், கோயமுத்தூர், 48	3
13.	773.	,, S. ராஜகோல ஐயங்கார், லக்ஷ்மீபுரம் காரைக்குடி, 49	3
14.	785.	,, ராவ்பகதூர் C. V. விஜயராகவாச்சாரியர், போர்ட், பம்பாய், 47, 48, 49	8
15.	787.	,, K. தேசிகாச்சாரியர், மதுங்கா, 48	3
16.	847.	,, T. ராகவாச்சாரியர், பூதலூர், 49	3
		ஆக மொத்தம் ரூ.	62

Regd. M. 4437.

SRIMAD RAHASYATHRAYA SARAM

EXPOSITION BY

Vidwan Kumbakonam Sri Ubha Srinivasa Raghavacharya Swami

REGULARLY EVERY SUNDAY 7-30 to 9-15 a.m.

UNDER THE AUSPICES OF

"ASTHIKA SABHA"

at No. 1, STATION VIEW ROAD, KODAMBAKKAM,

WITHIN HALF A FURLONG FROM THE KODAMBAKKAM R. S., MADRAS.

WELCOME TO ALL DEVOTEES.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜெண்டுகள் காபி 1-க்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா.

விளம்பர சார்ஜுகளின் விவரம்:—

ராப்பர் வெளிப்புறம்	பக்கம் 1-க்கு மீ 1-க்கு	ரூ. 20.
,, உட்புறம்	,, ,,	ரூ. 15.
ஸஞ்சிகையின் உட்புறம்	,, ,,	ரூ. 10.

ஒப்பந்தம் (Contract) விளம்பரங்களுக்குக் கட்டணம் இன்னும் குறைவாகும்.

(குறிப்பு) முன் பணம் அனுப்பப்பட்டாலன்றி விளம்பரங்கள் ப்ரசுரிக்கப்படமாட்டா.

இங்ஙனம்:

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம், வேப்பேரி, மதராஸ்-7.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Kancheepuram. Edited and Published by P. S. Srinivasa Desikachariar, No. 2, Audiappa Mudali Street, Purasawakkam, Vepery, Madras - 7.